தென்றல்

விலை 16 புதிய காசுகள்

ஆசிரியர்: கண்ணதாசன்

உள்நாடு (இலங்கை உட்பட) விலை 16 புதிய காசு | வெளிநாடு 20 காசு | அலுவலகம்: 'தென்றல்' சென்னை - 6.

மலர் 5 | சென்னை | 22-11-58 | சனிக்கிழமை | இதழ் 23

கொள்கைப் புரட்டர்களின் கோலம் தெரியுதண்ணே!

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மத்தியக் கமிட்டியும் தேசியக் கவுன்சிலும், அக்டோபரில்சென்னையில் கூடிக் கலைந்துவிட்டன. அக்டோபர் எட்டாம் தேதி முதல் பதிமூன்ரும் தேதி முடிய தேசியக் கவுன்சிலில் இந்தியத் துணைக்கண்டத்திலும் வெளியிடங்களிலும் இணைந்துள்ள பல பிரச்னைகள்பற்றிக் கருத்துக்கள் தெரிவித்துள்ளனர். அவைகளைக் கணக்கிட்டுப் பார்ப்போம். தேசியக் கவுன்சிலின் 105 உறுப்பினர்களில் எண்பது உறுப்பினர்கள் மட்டுமே கலந்துகொண்டனர். கட்சியின் செயலாளர் அஜய்கோஷும், கேரளத்து முதலமைச்சர் சங்கரனும் பிரதம விருந்தினர்களாகக் காட்சியளித்தார்கள். இவர்கள் எல்லாம் சென்னை வந்து சேர்வதற்கு முன்னதாகவே இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாட்டுத் தம்பிரான்கள் தங்களின் சீட கோடிகளுடன் வடநாட்டு வீரர்களையெல்லாம் வரவேற்க அணிவகுத்து நின்ருர்கள். இவர்களின் அணிவகுப்பைப் பொதுமக்கள் அலட்சியப் படுத்திவிட்டால் வருகின்ற விருந்தினர்களுக்கு மனம் நொந்து போகுமென்று எண்ணியே, பெருங்கூட்டம் சேர்க்க வசதியாக இருக்கும் வகையில், ரெயில்வே யூனியன் பதினேறு அம்சக் கோரிக்கைகளுக்காக அனந்தன் நம்பியார் அக்டோபர் இரண்டாம் தேதியிலிருந்தே உண்ணு விரதம் துவக்கினர். கிளர்ச்சிகளிலும் புரட்சிகளிலும் புடம் போட்டு எடுக்கப்பட்ட இந்தத் தங்கக் கட்டிகள் 'விரதம்' இருக்கப் போவதாக விளம்பரம் செய்துகொண்டார்கள் மூவண்ண அறிவிப்புக்கள்மூலமாக! பதினேறு அம்சக் கோரிக்கைகளுக்காக உயிரைத் தியாகம் செய்வேன் என்று குறிப்பிட்டார் அனந்தன் நம்பியார். ஜெனரல் மானேஜரையும் ஏனைய அதிகாரிகளையும் நாயினும் கேவலமாகக் குறிப்பிட்டார், அவர் விரதம் துவங்கும் சின்னுட்களுக்குமுன் மதுரை, திலகர் திடலில் பேசும்போது. அவர் விரதம் துவங்கியதும்-தந்திகள் பறந்ததும்-வாபஸ் வாங்கியதும்—பதினேறு அம்சக் கோரிக்கைகளைப்பற்றி எவரும் வாய் திறக்காததும் ஆகிய செய்திகளைக் கொண்டுதான் இந்த உண்ணு விரத மிரட்டல் சென்னையில் கூடுகின்ற தேசியக் கவுன்சிலுக்குக் கூட்டம் சேர்க்க ஒரு குறுக்கு வழியென்று முடிவு செய்ய நேரிட்டது. ஏ. கே. கோபாலனும் புபேஷ் குப்தாவும் பிரதமருக்குத் தந்தி அனுப்பினுர்கள், பதினேறு அம்சக் கோரிக்கைகளையும் ஏற்றுக் கொள்ளுங்கள் என்றல்ல; தோழர் அனந்தன் நம்பியாரின் உயிரைக் காப்பாற்றுங்கள்-அவர் சாதாரணமானவர் அல்ல. மாஜிப் பாராளுமன்ற உறுப்பினர்- கம்யூனிஸ்ட் கட்சி கேட்கவில்லை. இப்போதைய உறுப்பினர்கள் கேட்டார்கள்!

இந்தியக் கம்யூனிஸ்ட்கள் பேட்டி காண்பதிலும் கொடியேந்திக் கூவி விண்ணப்பங்கள் தருவதிலும் எவரையும் மிஞ்சியவர்கள். இதனை நன்கு புரிந்துகொண்டிருந்த பிரதமர் நேரு பதில் தந்தி அனுப்பினுர். நம்பியாருக்கல்ல. அவரின் அடுத்த வாரிசு தோழர் கல்யாணசுந்தரத்திற்கும் அல்ல. ஏ. கே. கோபாலன்-புபேஷ் குப்தா இருவருக்கும்! அவர்களுடைய தந்தியைப் பற்றிக்கூடப் பேசாமல் நம்பியார் பற்றியதை ஜகஜீவன்ராம் தெரிவித்தார். "உண்ணுவிரதம் சரியான வழியல்ல என்பது அனந்தன் நம்பியாருக்கும் தெரியும். அவரைக் கைவிட்டுவிடச் சொல்லுங்கள். தென்னிந்திய ரயில்வேயின் ஜெனரல் மானேஜரை எந்த நேரத்திலும் எங்கும் சந்தித்துப் பேசலாம்" என்பது தான் தந்தியின் பலனே தவிர-தொழிலாளரின் பதினேறு அம்சக் கோரிக்கைகள்- கம்யூனிஸ்டுகளே சொன்னதுபோல் சர்க்காருக்குப் பணச் செலவில்லாத பரிதாபத்துக்குரிய வேண்டுகோள் எதனைப்பற்றியும் பிரதமர் நேரு வாய் திறக்கவில்லை. இந்திய சர்க்காரை இணங்க வைக்க இந்த உண்ணு விரதம் என்பது அனந்தன் நம்பியாரின் பல பேச்சுக்கள்- கம்யூனிஸ்டுகளின் அறிவிப்பு. அவரைச் சந்தித்துப் பேசிய அத்தனை அகில இந்தியத் தலைவர்களும் அதனைத்தான் அங்கே கூடி நின்ற பொதுமக்களிடத்திலே சொன்னுர்கள். சர்க்கார்சம்மதம் அல்லது ஒரு உறுதிமொழி, கோரிக்கைகளைப் பற்றிக் கொடுத்தபின் உண்ணுவிரதம் நிறுத்தப்பட்டு அதனை வெற்றி வெற்றியென்று ஒலி பெருக்கியிருந்தால் - உண்மையிலேயே அது தொழிலாளர்களுக்காகத்தான் என்று எவராலும் ஏற்றுக்கொள்ளப்படும். ஆனல் அனந்த நம்பியாரை ஒரு வேடிக்கைப் பொருளாக்கி அவர் ஏற்கனவே தொழிலாளர் மத்தியில் மங்க வைத்துக் கொண்டிருக்கும் செல்வாக்கை மேலும் பழி வாங்குவதற்காக 'விரதம்' என்று பூசை போட்டார்கள்! வேடிக்கைப் பொருள் என்று கேலிக்காகச் சொல்லவில்லை. தேசியக் கவுன்சில் கூட்டம் முடிந்து (அகில இந்திய) வடநாட்டுத் தலைவர்கள், "தமிழ்நாட்டுக் கூஜாக்கள்" பின் தொடர விமான நிலையம் நோக்கிப் புறப்பட்டுக்கொண்டிருக்கும்போதே அனந்தன் நம்பியாரை விரதத்தைக் கைவிடக் கேட்டுக் கொள்வதாக தோழர் கல்யாணசுந்தரம் அறிவித்துவிட்டார்! அக்டோபர் பதினைந்தாம் தேதி "கரண்ட்" பத்திரிகையின் பின்வரும் குறிப்பு உண்ணு விரதம்—தேசியக் கவுன்சிலின் தொடர்பை விளக்குகிறது. "The indefinite fast undertaken by K. Anandan Nambiar Communist and railway labour leader...became a side-show to the big meetings in the City of Madras"—இதற்கேற்பத்தான் உண்ணு விரத மகிமையுடன் கோரிக்கைகளும் மறைந்துவிட்டன.

தேசியக் கவுன்சில் கூட்டத்திற்குப் பத்திரிகை நிருபர்கள் அனுமதிக்கப் படவில்லை. கூட்டம் முடிந்தபின்

கடை விரித்தார்கள்; கொள்வாரில்லை!

ஒவ்வொரு நாளும் பத்திரிகைகளுக்கு அறிவிக்கப்பட்டன. தற்காலிகத் தலைவர்களாகத் தோழர்கள் ஜோதிபாசு, சோகன்சிங், ரணதிவே-ஆகியோர் பொறுக்கியெடுக்கப்பட்டனர். ராமமூர்த்தி-ஜீவானந்தம் - கல்யாணசுந்தரம் அந்தக் கும்பலில் எங்கேயிருந்தார்கள் என்ற செய்தியே இன்று வரையில் இல்லை. பனிரெண்டாம் தேதிக் கடற்கரைக் கூட்டத்திற்கு பந்தல் அமைப்பு—மேடை அலங்காரப் பொறுப்புகளைத் தேசியக் கவுன்சில் இவர்களிடம் ஒப்படைத்திருக்கவும் கூடும்! இன்னொரு உறுப்பினர் சங்கரய்யா-மதுரையில் அடிக்கடி முழக்கமிட்டு, கட்சி ஊழியர்களுக்கு அரசியல் வகுப்புகள் நடத்தும் அதிகாரமும் அந்தஸ்தும் பெற்றுள்ளாரே—அவராவது தேசியக் கவுன்சிலில் "சிறப்புச் சொற்பொழிவு" நிகழ்த்தினாரா என்பதை 'ஜனசக்தி'யின் 'எமிலிஜோ'லா என்று சில கம்யூனிஸ்டுகளால் வர்ணிக்கப்பட்ட மாஜினி தெரிவிக்கட்டும்! பொதுச் செயலாளர் அஜய்கோஷ் நேரு, மௌரார்ஜி, ஜெயப்பிரகாஷ்-பிரஜா சோசலிஸ்டுகள்- பாகிஸ்தான்-இப்படிப் பல்வேறு பகுதிகளிலே தன்னுடைய பேச்சை இழுத்துச் சென்றிருக்கிறார். ஐந்தாண்டுத் திட்ட மதிப்பீடுகளைப் பற்றியும் தங்கத்தின் மகத்துவம் பற்றியும் உலக வங்கிக் கடனுதவியை வஞ்சகமென்றும் அமெரிக்க டாலர் ஆதிக்கம் என்றும் தனக்கே உரிய வெடி மருந்து வார்த்தைகளிலே ரணதிவேவிளக்கியிருக்கிறார். அமிர்தசரசுத் தீர்மானம் அகில உலகத்துக்கே அற்புத வழிகாட்டியென்றெல்லாம் பல நாட்கள் கட்சியின் கவனத்திற்கு வராமல் ஒதுக்கி வைக்கப்பட்டிருந்த பி. சி. ஜோஷி பேசியிருக்கிறார். கேரளக் கம்யூனிஸ்ட் சர்க்காரைப்பற்றிய தீர்மானம் மிகவும் முக்கியம் பெற்றது. முதலமைச்சர் சங்கரன் மத்திய சர்க்கார் மந்திரிகளையும்- ஏனைய எதிர்க் கட்சிகளையும் கண்டித்தார். இந்தியாவெங்கும் கேரள ஆதரிப்பு ஆர்ப்பாட்டங்கள் நடத்த ஆணை பிறப்பித்தது தேசிய கவுன்சில்! **"கேரள சர்க்காரின் சாதனைகளை தேசியக் கவுன்சில் பாராட்டியது. பின்வரும் செய்திகளை மந்திரி சபைக்கு வலியுறுத்தியது. பிரச்னைகளை மதிப்பிடுவதில் தெளிவு இல்லாமையைத் திருத்திக்கொள்ள வேண்டும். மந்திரி சபையின் வேலைத் திட்டங்களை விரிவாக்கிக்கொள்ள வேண்டும்!"** நவ கேரளத்தின் நம்பூதிரிபாத்துகளுக்கு நல்ல தெளிவில்லையாம்; அதனை அஜய்கோஷுக்கள் அறிவித்தார்களாம். பாதை என்னவென்பதில் தெளிவில்லாமையை கட்சியின் மத்தியத்தலைமையும் கவனிக்கவில்லையாம்- கட்சியும் கேரள சர்க்காரும் இனி என்றும் ஒன்றாக இருந்து செயல்படுமாம்- செயலாளர் இப்படி அறிவிக்கிறார்.

சென்னை தேசிய கவுன்சில் முடிவாகப் பல ருசிகரமான செய்திகள் கிடைத்திருக்கின்றன. கவுன்சில் உறுப்பினர்கள் தாங்கள் தினமும் புகழ்ந்துகொண்டிருக்கும் அமிர்தசரசுக் காங்கிரசின் முடிவுகளை அமல் நடத்தப் பலவற்றில் தவறிவிட்டதையும் சுட்டிக் காட்டியுள்ளார் செயலாளர். கட்சி உறுப்பினரின் வருமானததின்பேரில் தரம்வாரியாகக் கட்டணம் என்றுவிதித்து வசூலிக்கும்படியும் ராஜ்யக் கமிட்டிகளுக்கு தேசியக் கவுன்சில் ஆணையிட்டுள்ளது. முன்னைய மத்தியக் கமிட்டித் தீர்மானங்களை உறுப்பினர்கள் மறந்துவிடாமலிருக்க இந்த நினைவூட்டல் தேவைதான்! 7-11-58 ஜனசக்தியில் ஜீவானந்தம் 'அக்டோபர் புரட்சியும் இந்தியப் புரட்டர்களும்' என்று எழுதியிருக்கிறார்- கம்யூனிஸ்டுகளைத் தவிர எல்லோரையும் புரட்டர்கள் எனக் கூறுகிறார்! அதே பக்கத்தில் அஜய்கோஷ் பின்வரும் சேதிகளைச் சொல்லியுள்ளார்:

"நமது கட்சி உறுப்பினரிடை மார்க்சிச லெனினிச உணர்வு தேய்ந்து வருவதையும் பல உருவங்களில் புரட்டுவாதக் கருத்துக்கள் ஊடுருவி வருவதையும் (கம்யூனிஸ்டுகளிடத்தில்- ஜீவானந்தம் காணத் தவறியது) பிரத்தியட்ச நிலவரத்தை அனுசரிக்காத முறையில் கொள்கைப் பிடிவாதம் நிலவுவதையும் போக்க முடியவில்லை. இதன் விளைவாக கட்சிக்குள் மேலும் அன்னியக் கருத்துக்கள் நுழைய இடம் ஏற்பட்டுள்ளது. பூர்ஷ்வா தேசியம், சீர்திருத்த வாதம், கோஷ்டி மனப்பான்மை, ஸ்தாபனம்பற்றி அராஜகக் கண்ணோட்டம், பொதுவாக, சோர்வு இவை கட்சிக்குள் புகுந்துவிட்டன- (கம்யூனிஸ்டுகளே புகுத்திவிட்டனர்) கட்சி உறுப்பினரிடை தத்துவ ரீதியான கருத்து ஒற்றுமை அவசியம்."

தங்களின் தராதரத்தைத் தெரிந்து கொள்ளாமல் தாவிக் குதிக்கும் தமிழ்நாட்டுக் கம்யூனிஸ்டுகளுக்கு அவர்களின் அரசியல் குரு-அஜய்கோஷ் சொல்லியிருப்பதைத்தான் தெரிவிக்கவேண்டும். புரட்டுவாதக் கொள்கைகளிலே சிக்கித் தவிக்கும் அகில ஜனசக்தி ஆசிரியர்கள், புழுங்கித் தவிக்கும் அவர்களுடைய அகில இந்தியப் பொதுச் செயலாளரைச் சந்திக்கட்டும்! இந்தியத் துணைக் கண்டத்திலே கம்யூனிஸ்டுகளைத் தாண்டிய கொள்கைப் புரட்டர்கள் உண்டா என்பதை ஒரு வினாடி எண்ணிப் பார்த்துவிட்டுப் பல வகையான தத்துவங்களிலே புரண்டு எழுந்து நிற்க வேண்டும். பிகிங் நகரத்திலே பேசினாரே தமிழ்நாட்டுக் கமிட்டியின் செந்தமிழ்க் காவலன் கே. டி. கே. தங்கமணி, "இந்தோ - சீன பாய் பாய்" "மாஸ்கோ - டில்லி - பிகிங் - பாய் பாய்" என்று-அதனை மீண்டும் பாடிக்களித்திடலாம்!

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சித் தமிழ்நாட்டுத் தூண்கள்-நான்கிலிருந்து எட்டணாவரை கட்டணம் வைத்துக் கூட்டம் போட்டுக் காட்டத் தைரியம் உண்டென்று பேசிக் கழகத்துக்காரர்களையும் ஏசி வரும் கம்யூனிஸ்டுகளுக்கு மேலும் சில பொன்மொழிகளைக் கூறுவோம். அஜய்கோஷ் சொல்கிறார்:

"நமது கட்சி முழுவதும் அவசரத்தை உணர்ந்து விரைவில் தன் பலவீனத்தைப் போக்கிக் கொள்ள வேண்டும். கட்சி உறுப்பினர் கூட்டாளிகளைத் தேடிக்கொள்ள வேண்டும். கோஷ்டி மனப்பான்மை, தத்துவக் குழப்பம், புரட்டு வாதக் கருத்துக்கள் — இவைகளைத் தவிர்க்க வேண்டும். முன்னேற்றக் கண்ணோட்டத்துடன் கல்விப் பிரச்னைகளை கவனித்து முன்னேற வேண்டும்"— என்று தேசியக் கவுன்சில் மதிப்பீட்டை ஐந்தாவது கட்டுரையாக முடித்துள்ளார். ஈட்டிமுனைக் காம்ரேடுகளிடத்திலும் உரைகல் தளர்பதிகளிடத்திலும் அரசியல் குறிப்புக்கள் தருகின்ற விற்பன்னர்களிடத்திலும் நாம் கேட்க விரும்புவதெல்லாம்- உங்கள் செயலாளர் உங்களைக் கல்வியறிவற்றவர்களாக்கிப் படித்துப் பாடம் பெறுங்கள் என்று போதனை செய்துகொண்டிருக்கும் போது நீங்கள் எல்லாம் அணிவகுத்து நின்று; யார் இந்த அண்ணாக்கள் என்று கேட்பதுவும், தி. மு. க. எங்கே செல்கிறது என்று சொல் அடுக்குவதும் சரியா? அறையிலே இருக்க விரும்பாத நீங்கள் அம்பலத்திற்கு அழைக்கப்பட வேண்டுமென்று விரும்பித்தான் அறிஞர் அண்ணா அவர்கள்மீது அம்பு வீசிக்கொண்டு - தென்னகத்து முதலாளிகளின் தித்திக்கும் தேன் குரல் திராவிட முன்னேற்றக் கழகத்தின் குரல் என்று புலம்பும் கட்டத்திற்கு வந்துவிட்டீர்கள்-இதையும் படியுங்கள்:—

"திராவிட முன்னேற்றக் கழகத்தையும் என்னையும் ஏசுகின்ற கம்யூனிஸ்டுகள்- நான் 1949 வரை பெரியாரைவிட்டு ஒதுங்கியிருந்த நேரத்தில் கம்யூனிஸ்டுக் கட்சியில் வந்து சேரமாட்டேனா என்று காத்திருக்கவில்லையா? தூது வந்து பேரம் பேசிய தலைவர்களையும் இன்னும் நான் மறந்துவிடவில்லை-சென்னை தங்கசாலைத் தெரு 202 ஆம் நம்பர் வீடு-தெருப் பக்கத்து அறை-நினைவிருக்கிறதா-அரசியல் நாகரிகத்துக்காக ஆட்களைச் சொல்லாமல் விடுகிறேன்" என்று அறிஞர் அண்ணா அவர்கள் மதுரை, திலகர் திடலில் நான்கு மாதங்களுக்கு முன்னால் பேசும்போது அறைகூவல் விடுத்துக் கேட்டார்! கள்ளக் கணவனுடன் சுற்றிவிட்டுக் கலங்கும் காரிகையைப்போல் கம்யூனிஸ்டுகளின் தமிழ்நாட்டுத் தலைவர்களே- அண்ணா அவர்கள் ஒரு விடுதலை இயக்கத்தின் தலைவரானதால்-உங்களுடைய மானம் இன்னும் நிலைத்திருக்கிறது. அவர் கண்ணியத்தின் காவலர், உங்களையும் காப்பாற்றித் தந்துள்ளார்! கம்யூனிஸ்ட் கட்சியின் களங்கத்தைப் போக்க முயலுங்கள்-கழகத்தின்மீது இழிசொல் கணைவிடுக்கும் வேலையும் வேண்டாம்!

அனந்தநம்பியார் நடத்திய உண்ணாவிரதத் தெருக்கூத்து!

கூடலரசன்

வெண்பாப் போட்டி-31.

தனிச்சீர், "மீன்கொடியோன்" என்று வரும்படி வெண்பா எழுதுக.

வழி :

—— —— —— ——
—— —— —— —மீன்கொடியோன்
—— —— —— ——
—— —— ——.

முடிவு தேதி: 29-11-58.

தென்றல் வெண்பாப் போட்டி : : சென்னை - 6.

"போற்றுபவர் போற்றட்டும்; புழுதி வாரித்
தூற்றுபவர் தூற்றட்டும்; தொடர்ந்து செல்வேன்
ஏற்றதொரு கருத்தை என(து) உள்ளம் என்றால்
எடுத்துரைப்பேன் எவர்வரினும் நில்லேன்: அஞ்சேன் !"

எண்ணம்

மலர் 5 ‖ 22—11—58 ‖ இதழ் 23

ஜனநாயகமும் சர்வாதிகாரமும்

ஒவ்வொருவருக்கும் உள்ள பங்கை வெளிப்படுத்தும் வாய்ப்பை ஜனநாயக ஆட்சிமுறை வழங்குகிறது.

-பேராசிரியர் சீலி

ஜனநாயகம் என்பது ஒரு அரசாங்க அமைப்புமுறை; நாட்டின் சட்டபூர்வமான அதிகாரம் ஒரு குறிப்பிட்ட வகுப்பின், அல்லது வகுப்புகளின் கரங்களுக்குத் தரப்படாமல் சமுதாயம் முழுமைக்கும் ஒப்புவிப்பது.

-வரலாற்றுத்தந்தை ஹெரட்டற்றஸ்

எதேச்சாதிகாரம் காட்டுத்தீ ! ஜனநாயகம் ஒரு வீட்டு விளக்கு !

-அறிஞர் அண்ணா

இராணுவத் தளபதிகளிடம் ஆட்சிப் பொறுப்பைப் பறிகொடுக்கும் நாடுகளில், இறுதியாக இடம் பெற்றிருக்கிறது சூடான்.

பாகிஸ்தான், பர்மா, தாய்லந்து எனப் பரவி வரும் இராணுவ ஆட்சிக் காய்ச்சல், சமீபத்தில் சூடானையும் பற்றிக்கொண்டு விட்டது. அங்கும் அரசியல் கட்சிகள் கலைக்கப்பட்டுவிட்டன; அரசியல் சட்டம் செல்லாக் காசாக்கப்பட்டுவிட்டது; பத்திரிகைகளுக்குக் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன; அவசரநிலை பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

சூடான், எகிப்து நாட்டுக்குத் தென்புறமுள்ள அரபுநாடு. இரண்டாவது உலகப் பெரும்போருக்குப் பின் விடுதலை பெற்ற நாடுகளில் சூடானும் ஒன்று.

இரண்டாவது உலகப் பெரும் போருக்குப் பின் சுதந்திர நாடுகளாகத் திகழ ஆரம்பித்த நாடுகளில் பெரும்பான்மையானவை இப்போது இராணுவ ஆதிக்கத்தின்கீழ்ப் போய்விட்டன. இந்தியத் துணைக்கண்டமும், இலங்கையும் மட்டுமே இன்னும் 'ஜனநாயக வெளிச்சம்' போட்டுக் கொண்டிருக்கின்றன.

இராணுவ ஆட்சி ஏற்படத் தொடங்கும் நாடுகளின் புதிய அதிபர்களெல்லாம் ஒரே மாதிரியான கருத்துக்களையே கூறுகிறார்கள் :

'அரசியல்வாதிகள் நாட்டைக் குட்டிச்சுவராக்கிவிட்டார்கள். நாடெங்கும் இலஞ்சமும், ஊழலும் தலைவிரித்தாடுகின்றன. மக்களிடம் பீதியும், குழப்பமும் நிலவுகின்றன.'

மாறி மாறி இதே விஷயத்தையே அவர்கள் வேறு வேறு நடையில் வெளியிடுகிறார்கள்.

அண்மையில் இராணுவப் புரட்சியின்மூலம் சூடானில் அதிபராகிவிட்ட ஜெனரல் **இப்ராஹிம் அபூத்**தும் இதே காரணங்களைத்தான் தனது இராணுவ ஆட்சிக்கான அடிப்படையாகக் காட்டுகிறார்.

ஆனால், சூடானில் இந்த மாறுதலுக்கு இந்தக் காரணம் மட்டும்தான் என்று உறுதியாகச் சொல்வதற்கில்லை. ஏனென்றால், அதன் அண்டை நாடான எகிப்தும், அதன் தலைவரான நாஸரும் இன்று உலக அரங்கில் பெற்றிருக்கும் குறிப்பிடத்தக்க இடம் எல்லோருக்கும் தெரியும். வளர்ந்து வரும் எகிப்துடன் தங்களை இணைத்துக்கொள்ள விரும்பிய அரபுநாடுகள், நாஸரின் தலைமையில் ஐக்கிய அரபுக் குடியரசாக உருப்பெற்றிருப்பதும், அந்த அமைப்பு மேற்கத்திய நாடுகளுக்கு அச்சம் ஊட்டக்கூடியதாக அமைந்திருப்பதும் யார் கண்ணிலும் படாமல் போவதற்கு வழியில்லை.

வழக்கமான பிற்போக்குத்தன்மையிலிருந்து விடுபட்டு, முன்னேற்றப் பாதைக்கு மக்களை இட்டுச்செல்லும் ஐக்கிய அரபுக் குடியரசில் தாங்கள் வாழும் நாடும் இணையவேண்டும் என்று அரபு நாடுகளில் வாழும் மக்கள் பெரிதும் விரும்புகின்றனர். ஆனால் இதுவரை அதிகாரத்திலிருந்து வரும் பிற்போக்கு அரசியல்வாதிகள், மக்களின் அந்த விருப்பங்களைச் செயல்படுத்தினால், அதன்மூலம் தாங்கள் நினைப்பதைச் செய்யமுடியாதே எனக் கருதித் தங்கள் நாடுகளை அந்த ஐக்கியக் குடியரசில் இணைத்துக்கொள்ள மறுக்கிறார்கள். அதே நேரத்தில் அதிகாரச் சுக்கான் தங்கள் கரங்களில் வரவேண்டும் என்று கருதுகிற இராணுவ அதிபதிகள், இந்த சூழ்நிலையைத் தங்களுக்கு சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டு, திடீர்ப்புரட்சியின்மூலம் அரசியல்வாதிகளைக் கவிழ்த்துவிட்டு ஆட்சிக்கு வந்துவிடுகிறார்கள். இருக்கும் ஆட்சியாளர்மீது வெறுப்புற்ற மக்களோ, தாங்கள் விரும்பும் எண்ணத்தைச் செயல்படுத்துவதாகக் கூறும் இராணுவத் தலைவர்களை எதிர்க்கமாட்டாமல்—வேறு வழியும் இல்லாமல்-ஏற்றுக்கொண்டு விடுகிறார்கள்.

அரபு நாடுகளில் ஏற்பட்ட புரட்சிகளைத் துருவித்துருவி ஆராய்ந்தால் இந்த உண்மைதான் புலப்படும். எனவே, இதை வைத்துக்கொண்டு மக்கள் ஜனநாயக ஆட்சியை விரும்பவில்லை, சர்வாதிகார ஆட்சியைத்தான் விரும்புகிறார்கள் என்று சாதித்துவிட முடியாது.

இப்படி திடீர்ப் புரட்சிமூலம் ஆட்சிக்கு வருகிற இராணுவத் தலைவர்கள் எல்லோருமே சர்வாதிகார எண்ணம் கொண்டவர்களாகத்தான் இருப்பார்கள் என்றும் நாம் சொல்லிவிடுவதற்கில்லை, அவர்களிலேயே சிலர் தங்களின் சர்வாதிகாரப் பயமுறுத்தல்மூலம் நாட்டுக்குத் தேவையான நல்லனவற்றைச் செய்யலாம் என்றும் நாம் நம்புவதற்கு இடமிருக்கிறது.

சூடானில் ஏற்பட்டுள்ள இந்த மாறுதல், உலக அரங்கில் குறிப்பிடத்தக்க ஒரு மாறுதலை உருவாக்கியிருக்கிறது என்று சொல்வதற்கில்லை. எனினும், வரிசையாக இராணுவ ஆட்சிக்கு வந்துகொண்டிருக்கும் நாடுகளின் எண்ணிக்கை அண்மையில் அதிகரித்துக்கொண்டே போவதுதான் ஜனநாயக விரும்பிகளுக்கு வேதனை தருவதாக அமைகிறது.

சர்வாதிகாரத்தின்மூலம் நாட்டு மக்களின் வாழ்வுக்கு நலம் தேடித்தர முடியும் என்ற கருத்து, முழுவதும் மறுக்கமுடியாததுதான் என்றாலும், பொதுவாக சர்வாதிகாரிகள் அனைவருமே நல்லவர்களாக இருப்பார்கள் என்று சொல்வதற்கில்லை. எனவே, சர்வாதிகாரிகள் நல்லவர்களாக இருந்தால் மட்டுமே நல்லனவற்றை நாம் எதிர்பார்க்கமுடியும். கொடியவர்களாக இருந்தாலோ...?

ஆனால் ஜனநாயக அரசில் இத்தகைய அச்சத்திற்கு இடமிருப்பதற்கே வழியில்லை. மக்களுக்காக, மக்களால் தேர்ந்தெடுக்கப்படும், மக்கள் அரசான (The government of the people, for the people, by the people) ஜனநாயக அரசில் விரும்பும்போது விரும்புகிற மாற்றத்தைச் செய்துவிட நிச்சயமாக இடமுண்டு. புத்திசாலிகளால் தேர்ந்தெடுக்கப்படாத ஜனநாயக அரசுதான் முறையான வழியில் பயணம் செல்லமுடியாதே தவிர, மற்றப்படி ஜனநாயக அரசுகள் நல்ல பயனையே தரும் தகுதிபெற்றவையாகும். ஜனநாயக அமைப்பின்படி வாக்காளர்களின் அறியாமையை முதலாகக் கொண்டு நல்லவர்களல்லாதவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்று நடத்தினாலும், வாக்காளர்கள் உணர்வுபெற்ற அன்றே ஆட்சியில் மாற்றத்தை ஏற்படுத்திவிட முடியும். சர்வாதிகார ஆட்சியிலோ எந்தக் காலத்திலும், எந்த மாற்றத்தையும் எதிர்பார்ப்பது அறிவுடைமையாகாது.

இதனாலேதான் தொல்லைகள் நிரம்பியதாக இருந்தாலும் ஜனநாயக ஆட்சியே வேண்டும் என்று மக்கள் தலைவர்கள் சொல்லிப்போயிருக்கிறார்கள். இந்த உண்மைகளை உணர்ந்துகொண்டால், சர்வாதிகாரிகளுக்கு 'சபாஷ்' போடும் மக்கள் குறைவார்கள்; ஜனநாயக மணம் எங்கணும் கமழும்.

பொங்கல் மலருக்கு வெண்பாப் போட்டி

இந்த ஆண்டுத் "தென்றல்" பொங்கல் மலரில் குறிப்பிடத்தக்க சில வெண்பாக்களை வெளியிட இருக்கிறோம். இந்த வெண்பாக்கள் தமிழ் உள்ளளவும் நிலைத்து நிற்கவேண்டும். அதனால் போட்டியின் கருப் பொருளாக ஊர்களுக்குப் பெயர்கள் வந்த காரணத்தைக் கொள்ளக் கோருகிறோம்.

ஏதேனும் ஒரு ஊரின் தமிழ்ப் பெயரை எடுத்துக் கொண்டு, அந்தப் பெயர் அந்த ஊருக்கு எப்படி வந்தது என்பதற்கான காரணத்தை ஆதாரத்தோடு வெண்பாவாகத் தரவேண்டும். ஒருவரே பல ஊர்களைப்பற்றி எழுதலாம். ஆனால் ஊரும் பேரும் ஒரு வெண்பாவாலேயே முடிந்துவிட வேண்டும்.

நேரிசை வெண்பாவாகவே எழுதவேண்டுமென்பதில்லை. வெண்பாவின் எந்த இனத்தில் வேண்டுமானாலும் எழுதலாம்.

பொய்க் கதைகளை ஆதாரங்களாகக் கொள்ளவேண்டாம். எல்லோரும் ஒப்புக்கொள்ளக்கூடிய ஆதாரம் வேண்டும்.

முடிவு தேதி : 22-12-'58

வெண்பாக்கள் அனுப்பவேண்டிய முகவரி :

ஆசிரியர்,
"மலர் வெண்பா",
"தென்றல்",
சென்னை-6.

பரிதாபமே! உன் மறுபெயர்தான் பாஸ்டர்நாக்கா?

"பாஸ்டர் நாக் என்ருல் என்ன? ஆடா, மாடா? ஆரு, குளமா?" என்ற முறையில் கேலி செய்கிறது "ரூபிள் சிங்காரி" பிளிட்ஸ். அல்ல! அல்ல! கருத்துக்களை வெளியிட்டதற்காக, "அரிவாளால் அறுக்கப்பட்டு, சுத்தியலால் நொறுக்கப்பட்டுவிட்ட" பாஸ்டர் நாக், சிறந்த கவிஞன்; சிந்தித்த மனிதன்! அவரது வாழ்வும், வாக்கும், பணியும் விமர்சிக்கப்படுகின்றன, இங்கு.

சூழப்பப்புயல்! சோர்வுச்சுரு! மாற்றுக் கருத்து அலைகள்! இவ்வளவையும் எதிர்த்துக் கற்பனைக் கடலின் அடித்தளத்திற்குச் சென்று சிப்பிகளை அள்ளி வருகிருன். ஓடுகளுக்குள்ளே கிடக்கும் ஒளிமுத்துக்களைப் பிரித்து எடுத்துத் தூய்மைப்படுத்துகிருன். எழில் முத்துக்கள் சிரிக்கின்றன. அவன் இதழ் விரிகிறது; இதயம் களிக்கிறது.

"உழைப்பின் பலன் ஒளி வீசுகிறது. ஊராரிடம் எடுத்துக்காட்டுவேன்! 'உயர்முத்துக்கள் தந்தவனே, நீ, உலகம் உள்ளளவும் வாழி!' என வாழ்த்திடுவர்; மகிழ்ந்திடுவேன்!"

எண்ணங்கள் இப்படிக் கிளைவிட மக்கள் அவைமுன் தன் நூல் முத்துகளைப் படைகிருன். மக்கள் விழிகள் ஒளிக்கற்றைகளைக் காண்பதற்குள் அந்தோ......கொடுங்கை ஒன்று சம்மட்டி தூக்கி அடித்துத் தூள் தூளாக்கிவிட்டது, ஒளி முத்துக்களை!

முத்துக்களைக் கொணர்ந்த கலைஞன் முகத்திலும் வயிற்றிலும் அடித்து அரற்றத் தொடங்குகிருன். சம்மட்டி தன் புறம் திரும்புவதைக் காண்கிருன்; அழுதவாய், மூடுகிறது; தேம்பிய நெஞ்சம் செயலற்றுப் போகிறது. அழுவதற்கும் அவனுக்கு உரிமை இல்லை! அழகுக் கருத்து முத்துக்களை உடைத்தெறிந்த கூட்டம்தான் அதையும் சொல்கிறது.

ஆமாம்! முத்துக்களை இழந்த வறியவன் கதைதான், பாஸ்டர் நாக்கின் கதையும்.

67 வயது ஆன அவர் நூற்களைப் படித்தோர்-அதிலும் டாக்டர் சிவாகோவைப் படித்தோர் மிகக் குறைவானேர்தாம். என்ருலும் எல்லாரும் படித்தறியாத நூல் பற்றிக் கருத்து மழை பொழிகின்றனர். பண்டிதர் கூட, 'படித்தறியவில்லை, அந்நூலை என்ருலும், எழுத்தாளர் உரிமை பறிக்கப்படுவதைக் கண்டிக்கிறேன்!' என்கிருர். அவன் இம்மக்களைப் பார்த்துச் சொல்கிருன்:

"எல்லோரும் இதைப் பற்றி எழுதுகின்றனர்; பேசுகின்றனர். ஆனுல் உண்மையில் இதைப் படித்தவர் யார்? அதிலிருந்து எந்த மேற்கோளை எடுத்துக்காட்டியுள்ளனர்?"

தன்னைக் காணவந்த செர்மானியச் செய்தியாளிடம் இப்படிக் கூறியுள்ளான். இத்துணைக் கணைகளைத் தொடுக்கும் உருசிய மக்களுள் (?) ஒருவர்கூட அந்த நூலைப் பார்த்ததில்லை; படித்ததில்லை! என்ருலும் காட்டிக்கொடுத்த கயவன் எனக் கண்டிக்கின்றனர். இதைவிட விந்தை-பாஸ்டர் நாக்கே இத்தாலியில் வெளியான தன் நூலைக் கண்ணுலும் காணவில்லையாம்!

"டாக்டர் சிவாகோ" என்ற அந்நூல் இத்தாலி, பிரான்சு, செர்மனி, ஸ்காண்டிநேவியா, பிரிட்டன், அமெரிக்கஅய்க்கிய நாடுகள்முதலியவற்றில் விற்பனையில் உயர்ந்த எண்ணிக்கையையும், இலக்கியப் பான்மையில் சிறந்த முறையையும் காட்டியுள்ளது.

பன்னிரண்டு மொழிகளில் வெளியாகிவிட்டது என அறிவிக்கப்பட்ட பின்னர்தான், மாஸ்கோ வானெலி பத்து மொழிகளில் அறிவித்தது: "டாக்டர் போரிஸ் பாஸ்டர்நாக் எனப்படுபவர், உருசிய எழுத்தாளர் மன்றத்தின் உறுப்பினரல்லர்!"

உருசிய ஏடுகளும் அப்படியே முழங்கின! அறிஞர் போரிஸ் பாஸ்டர் நாக் (Boris Pasternak) இந்த நூலிலுள்ளகருத்துக்களுக்குத் திடீரெனத் தன்னை ஒப்படைத்தவர் அல்லர். உருசியப் புரட்சி வெடித்த ஞான்று அவருக்கு வயது 27 தான். ஆனுலும் புரட்சியின் போக்கையும் ஆட்சியின் நிலையையும் நன்கு உணர்ந்துகொள்ளும் பரந்த அறிவும் சிறந்த ஆராய்ச்சி மனப்பான்மையும் கொண்டிருந்தார். அவர் புரட்சியில் ஆழ்ந்த பங்கு கொண்டவரல்லர். சமூக, அரசியல் புரட்சிப் படலங்களில் ஆழத் தன்னை ஈடுபடுத்திக்கொள்ளாத அவர், தன்னுலான நாட்டுப் பணியைத் தனியே செய்துவந்தார்.

அவரது தந்தை உருசியாவில் புகழ்வாய்ந்த ஓவியர்; டால்ஸ்டாயின் நெடுங்கதை நூல்களுக்குப் படம் வரைந்தவர் அவரே. தாயார் மதிப்புப்பெற்ற இசைவாணி. புரட்சிக்குப்பின் அவர் தந்தை உருசியாவை விட்டு வெளியேறி விட்டார். அவரது தங்கை ஒருத்தி, ஆக்ஸ்போர்ட் பல்கலைக் கழகப் பேராசிரியர் ஒருவரை மணந்து இங்கிலாந்தில் வாழ்கிருள்.

அவர் மாஸ்கோவிலிருந்து ஏறத்தாழ 20 மைல் தொலைவில் உள்ள பெரிடெல்கினே என்ற சிற்றூரில் வாழ்கிருர். நெடிய குன்றுகளும், பசிய பைன் மரங்களும் அடர்ந்து வளைத்துள்ள இவ்வூரில், உருசிய எழுத்தாளர் மன்றம் தன் எழுத்தாளர்க்கென ஒரு குடியிருப்பை 1930-ல் கட்டியது. (ஊரின் நுழைவில் "எழுத்தாளர்களின் இல்லங்கள்" என்னும் அறிவிப்புப் பலகை ஒன்று உள்ளது. இன்று எந்த மன்றம் தனது உறுப்பினர் அல்ல அவர் என்கிறதோ, அதே மன்றம் தான், அந்தக் குடியிருப்பில் தனது உறுப்பினன் என்ற முறையில் ஒரு கட்டடத்தைத் தந்திருந்தது. அக்குடியிருப்பின் மற்ற வீடுகளைப் போன்றே பாஸ்டர் நாக்கின் வீடும் பரந்த தோட்டத்திற்கு நடுவில் அமைந்திருக்கிறது. பெரிய பெரிய சாளரங்கள் கதிரவனின் ஒளிக்கற்றைகளையும் இளங்காற்றையும் தருகின்றன.

எளிமை தவழ்கிறது, இல்லம் முழுவதும். தனக்கு மாஸ்கோவில் ஒரு மாளிகையின் பகுதி தரப்பட்டிருந்தும், எளிமை நாடிப் பெரும்பாலும் தனது டாச்சாவிலேயே (குடிசையிலேயே) வாழ்கிருர். அவ்வீட்டின் சுவர்களை அவரது தந்தையார் தீட்டிய ஓவியங்கள் அழகுபடுத்துகின்றன. ஓர் அறையில் தொலைக்காட்சிப் பெட்டியும் உள்ளது. அவரது நூலக அடுக்குகளை மேலைநாட்டு ஆசிரியர் படைப்புக்கள் பல அடைத்திருக்கின்றன. அவற்றுள் உருசிய மொழி பைபிள் ஒன்றும் உள்ளது. அவர் தன்னைப் புதுவகை நாத்திகனுகச் சொல்லிக்கொள்கிருர். அவரை அண்மையில் அக்குடிசையில் கண்ட செர்மானியச் செய்தியாளன் ஒரு வினு விடுத்தான்:

"கடவுளைப் பற்றி உங்கள் கருத்தென்ன?"

விடை தந்தார் இப்படி: "மனிதன் கட்டாயம் மூன்று பணிகளில் கடவுள் தன்மையைக் காண்கிருன், முழுவதும் தவறில்லாததுமான முறைகளில்; முதலாவதாக, கலைப்பணி ஏதேனும் ஒன்றில் ஆழ்ந்து ஈடுபடுகையில்; இரண்டாவதாக, தனது தாயகத்தைக் காதலிக்கையில்; இறுதியாக, உள்ளம் கவர்ந்தவளைக் காதலிக்கையில்!"

கடவுளை அவர் மனித உணர்வுகளின் நிறைவுகளில் காண்கின்ருர்.

அவர் மேலைநாட்டு இலக்கிய ஓடையில், தத்துவ, கலைப்பண்புச் சுனையில் நிறைய அள்ளி அள்ளிப் பருகியிருக்கிருர். ஐரோப்பிய நாகரிகத்தின் முன்னேடிகளான பல்வேறு ஆசிரியரைச் சுவைத்திருக்கிருர். ஆங்கிலம், பிரஞ்சு, செர்மானியம் முதலிய மொழிகளில் வல்ல புலமைப் பெருக்குள்ள அவர், ஷேக்ஸ்பியர், கதே, பிரௌஸ்ட், காப்கா, ரில்கி, தாமஸ் மெய்ன், டி. எஸ். எலியட், ஜேம்ஸ் ஜாய்ஸ் முதலியோர் நூற்களை உருசியத்தில் மொழிபெயர்த்திருக்கிருர். கடந்த இருபது ஆண்டுகளும் தனது மொழிபெயர்ப்பின் மூலமே அமைதியான வாழ்வு நடத்தினர்.

போரிஸ் பாஸ்டர்நாக்.

நெடுங்கதை உலகில் அவருக்குப் பேரிடம் இல்லாவிடினும், தனது கவிதைகள்மூலம் தனக்கென ஒரு தனி இடம் வகித்தார். அவரது கவிதைகளைப் படிக்க நீண்ட ஒரு கூட்டம் காத்து நிற்கவில்லை. அவை எந்தத் தனி மனிதனையும் பாராட்டாததால்தான், அந்த நிலை. தனி மனிதர் வாழ்க்கை, சோவியத் ஆட்சி முறை முதலியவற்றைப் புகழ்ந்து தீட்டாததால், ஆண்ட ஸ்டாலினின் கடைக்கண் பார்வை அவர்மீது விழவில்லை; அவன் புகழாததால் மக்கள் அணி திரளவுமில்லை. ஸ்டாலின், பாஸ்டர் நாக்கின்மீது குறி வைத்திருந்தான். நாக்கின் திறமைகளைக் கண்டு நடுங்கிய அவன், மக்கள் அவரை அறியவிடாதபடி தடுத்தான். ஸ்டாலின் காலம் முழுதும், அவர் மொழிபெயர்ப்புக்களை மட்டும் வெளியிட்டார். மக்கள் அவரது பாடல்களைச் சுவைக்கவில்லை என்ருலும் கற்றறிந்த அறிஞர் குழுக்கள் அவற்றை கண்டிருக்கின்றன; சுவைத்திருக்கின்றன. அப்பாடல்களில் இயற்கைக் கூற்றும் கற்பனை வளமும் செறிந்திருக்கின்றன. அவர் சொல்வதுபோல, அவை கற்பனைக்குக் கற்பனை எழுந்தவை; உணர்ச்சிமேல் உணர்ச்சியாய் விளைந்தவை. அவை எந்த ஆட்சி முறையையும் புகழவில்லை; எந்த அரசியல் நெறியையும் எதிரொலிக்கவில்லை; இலக்கியச்சுவை எனும் தனிமை கொண்டன.

அக்கவிதைகளின் முதல் இரு தொகுதிகள் 1917 முதல் 22-ம் ஆண்டுக்குள் எழுதப்பட்டவை அவை. அவை 1943-ம் ஆண்டும் 1945-ம் ஆண்டும் வெளியாயின. அவையன்றி, அவாது நாடகங்கள் பல உள. அவற்றுள் ஒன்ருன "மரியா ஸ்டூட்டர்ட்" என்னும் மொழிபெயர்ப்பு நாடகம் அண்மை வரை மாஸ்கோக் கலை அரங்கில் நடந்ததாம். அல்லாமல் மேலும் பல கவிதைகள் புரட்சியை ஒட்டிய காலத்தில் எழுதப்பட்டுள. இன்றும் அவற்றின் பொருளுணர்ந்து, எழிலில் திளைக்கும் ஆற்றலுடையோர் வெகு சிலரே.

அவர் மனைவி குடும்பப்பாங்குணர்ந்தவர். ஞாயிறு தோறும் மிகுந்த உணவு ஆக்கப்படும். அவரது நட்பினர் - அனைவரும் மேலைநாட்டு இலக்கியங்களில் சுவையுடையோர்- ஞாயிறு அன்று அவரது இல்லத்தில் கூடுவர். வரத் தவறியோரைத் தொலைபேசி மூலம் அழைப்பார், நாக். எல்லோரும் வந்தபின் செவி விருந்தும் வயிற்று விருந்தும் நடக்கும். ஆடவரும் பெண்டிருமாய் வரும் விருந்தினர் அனைவரும் இலக்கியத் திறனுய்வில் ஈடுபடுவர். மாஸ்கோவிலிருந்தும் பலர் வருவர்; மேற்கு ஐரோப்பாவிலிருந்து வந்த வெளிநாட்டினரும் அவர் வீடு போந்திடுவர், கலந்துரையாட. அவர் தனது வெளிநாட்டு நட்பினர்க்கு இலக்கியம் பற்றிக் கடிதங்கள் எழுதுவார். அவை தவருது உரியோர்க்குப் போய்ச் சேருகின்றன எனத்தான் எண்ணுகிருர்.

சமூகத்தில் நடக்கும் தீமைகளைக் கண்டிக்க வாய்ப்பற்றுப்போன நிலையில், அவர் தன் கவலைகளை மறப்பதற்குக் கிடைத்த மருந்துகள் இலக்கியங்கள்தான். அவர் வாயைத் திறந்திருந்தால், ஸ்டாலின் செத்திருப்பான். மற்றையோரை அழித்த

— 9-ம் பக்கம் —

கவியரங்கில்...

– கண்ணதாசன் –

பண்பினைப் பற்றிப் பாடுவார் கவிஞர்
சண்முகக் கனியர் இச்சபையில்.

★

தமிழ்: பண்பு

– அ. சண்முகக்கனி –

குன்றக் குறவர் கொம்புத்தேன்
குழைத்துச் செய்த தினைமாவை
தென்றற் கவியால் நினைவூட்டும்
தென்றமிழ்க் கண்ண தாசய்ய!
பன்னரு பைந்தமிழ்ப் பண்பருமை
பண்ணால் நின்முன் சொலவந்தேன்!
உன்னருந் தன்னளி வேண்டுகின்றேன்!
ஒளிமிகு புகழோய் செவிதாராய்!

முத்துத் தம்பி முழுநிலவோய்!
மோகக் கவிதைக் கிறக்கத்தில்
சித்தந் தவறி யுரைசெய்யும்
சிறுபிழை பொறுப்பாய்! இதயத்தில்
நித்தஞ் சுரந்தே பெருக்கெடுக்கும்
நீள்கவி யுணர்வின் துணையாலே
பித்தன் நிலையேன் தமிழ்ப்பண்பைப்
பேசும் துணிவை மேற்கொண்டேன்.
எட்டாக் கவிப்பொருட் பெருவெளியில்
எண்ணந் திரிதர நாடோறும்
கிட்டா ஆசைக் கடலிடையே
கிடந்தே பைதல் கொள்வேனை
தொட்டாற் கமழு மென்றப்பி
சொற்றமி ழரும்பண் புரையென்றே
இட்டா ராணை மன்றத்தார்
ஏற்றேன்! கவிதை புனைகின்றேன்!

அமிழ்தினு மினியது தமிழ்ப்பண்பு!
அன்பால் வளர்ந்தது தமிழ்ப்பண்பு
இமிழ்கடல் ஞாலம் பெறுகவின்பம்
என்றே நினைப்பது தமிழ்ப்பண்பு
தமதுடல் பொருளுயிர் யாவினையும்
தமதிது வரையினி யுமதென்றே
அமைவில ரேனும் தன்புறுங்கால்
அளிக்குந் தகையது தமிழ்ப்பண்பு.

பண்பெனுஞ் சொற்பொரு டுலக்குதற்கே
பாரில் முகிழ்த்தது தமிழ்ப்பண்பு
தண்புனல் வையந் தழைப்பதற்கே
தலைவழி வகுப்பது தமிழ்ப்பண்பு
கண்ணோ டாதிறை புரிசோழன்
கதறு மாவின் துயர்கண்டே
மண்ணுரி மைசேர் சிறுவன்றன்
மாணுயிர் கொண்டதும் தமிழ்ப்பண்பு.
பொதுமகட் குலவழிக் கிளைத்தாலும்
பொய்மை சேரா நெறிநின்றே
முதுபெருங் குடிவழிக் கோவலனின்
முடிவறி போழ்தே துறவேந்தி
மதுநிக ரின்பந் தரவல்ல
வாழ்வை மதியா மாதவியின்
புதுவழிப் போகிய வியன்காதை
புவிக்களித் ததுவும் தமிழ்ப்பண்பு.

இப்பெரும் பண்புக் கிடாக
ஈரக் கடல்சூழ் வையத்தில்
ஒப்பிடும் பண்பொன் றிலதம்ம!
உன்னுந் தோறு மந்நிலையே
செப்பிட வறியா மகிழ்வொன்றைச்
சிந்தை முழுதும் சேர்க்குதம்ம!
ஒப்பரு மப்பெருந் தமிழ்ப்பண்பு
உலகுள் ளளவும் வாழியவே!

[இத்துடன் கவியரங்கம் முற்றுப்பெற்றது.]

இரு மடல்கள்!

அவன் :

மாங்காட்டிற் போய்க்கூவாக் குயிலே! என்றன்
மனக்காட்டைச் செழிக்கவைக்கும் மழையே! நெஞ்சில்
நீங்காத குளிர்நிழலே! அன்பின் அத்தான்
நெஞ்சார வேண்டுகிறேன். இந்நாள் மட்டும்
தூங்காமல் முதற்சாமம் முடியும் போதில்
தொலைவுள்ள தோப்புக்கு நடந்தே வாவா!
ஏங்கிநிற்கும் நானுமங்கே வருவேன்; பின்னர்
ஏட்டிலிலாக் கதையெல்லாம் நடத்தித் தீர்ப்போம்.

புத்தமுதே! ஒருநாளும் இரவு நேரப்
பொழுதினிலே வரச்சொல்லி அழைத்த தில்லை!
புத்தகத்தைத் தூக்குகின்ற கல்வி நேரப்
பொழுதினிலே வரச்சொல்வேன், வருவாய்; மஞ்சட்
புத்தொளியை விரிக்கின்ற மாலை நேரப்
பொழுதினிலே நான்வருவேன்; வருவாய்! இன்றோ
முத்தழகே! தனிமையிலே வானில் மேவும்
முழுநிலவில் உனைக்காண ஆசை கொண்டேன்!

வாடாத பனிமலரே! வாவா, தூக்கம்
வாராத தொல்லையினை வந்தே போக்கு!
பாடாத பைங்கிளியே! வாவா, முள்ளாய்
படுக்கைஎனைக் குத்துகின்ற துன்பம் நீக்கு!
தேடாத நறுந்தேனே! வாவா, வந்தே
தேடுகின்ற விழிகளுக்கு ஒளியுண் டாக்கு!
ஓடாத குளிர்நிலவே! இன்று மட்டும்
'உம்'மென்று சொல்லிவிடு; மறுப்பே வேண்டாம்!

அவள் :

நெஞ்சுக்குள் நெஞ்சான அத்தான்! உங்கள்
நீள்மடலைக் கண்டேன்நான்! ஆசை யோடு
கொஞ்சுதற்குத் தோப்பருகே வாவா வென்று
கூறியுள்ளீர்! சொல்வதற்கு என்ன அத்தான்!
தஞ்சைவள நெல்எனினும் உமிதான் போனால்
தரையினின்று முளைப்பதில்லை; அதுபோல் சொன்னால்
வஞ்சியர்க்கும் பெருங்கற்பே உமிதான்; இங்கே
வழிசிறிது தவறிவிட்டால் தமிழ்ப்பெண் இல்லை!

கிண்ணத்தில் இருந்தாலே பன்னீர்; சிந்திக்
கீழ்விழுந்தால் அதுபன்னீர் இல்லை; ஈர
மண்ணுக்குள் இருந்தாலே வேராம்; அன்றி
மண்ணினின்று பெயர்த்துவிட்டால் உயிர்வேர் இல்லை!
வெண்ணெயென்றால் நெருப்பருகே செல்லா முன்தான்.
வெந்தணலில் பட்டுவிட்டால் வெண்ணெய் இல்லை!
பெண்ணுக்கும் இவைபொருந்தும்! தொட்டே இன்பம்
பெற்றுவிட்டால் அவள்தமிழ்ப்பெண் இல்லை, அத்தான்!

பாம்பிருக்கும் தேள்இருக்கும் வழியில் என்னும்
பயமில்லை என்நெஞ்சில்! பாதை யோர
வேம்பினிலே பேயிருக்கும் என்றே ஊரார்
வெற்றுரைக்கும் அஞ்சவில்லை! மணநாள் வைக்க
சோம்பலுடன் நெடுநாட்கள் கழிப்பீர் என்றும்
துளிக்கூட ஐயமில்லை! பொறுப்பீர்! நாங்கள்
ஓம்புகின்ற கற்பொன்று இல்லை யென்றால்
'உடல்விருந்து' அளித்திடுவேன் மணத்தின் முன்பு!

–கா. வேழவேந்தன்

ஊமையன் கோட்டை

கண்ணதாசன்

8

சிறை உடைந்தது; புலி பாய்ந்தது!

மறுநாள் பொழுது விடிகிற நேரத்தில் பாளையங்கோட்டைக்கு வந்து சேர்ந்தான் வீரத்தேவன். ஆத்திரத்தில் புறப்பட்டுவிட்டாலும்,வழிநெடுகிலும் அவன் உள்ளம் அலைபட்டுக் கொண்டிருந்தது. அஞ்சுகத்திடம்கூடச் சொல்லாமல் வந்துவிட்டோமே என்று கலங்கினான். ஒரு வீரனுக்கு இருக்கவேண்டிய விவேகமும், முன் யோசனையும் வீரத்தேவனுக்கும் உண்டு. ஆனால் எந்த விவேகத்தையும் பழுதுபடுத்திவிடும் கோபம் அவனையும் தனக்குள் அடக்கிவிட்டது. அது தெளிந்த நேரத்தில் அவன் சிந்தை கலங்கிற்று. திரும்ப அஞ்சுகத்தைச் சந்திப்போம் என்ற நம்பிக்கைகூட அவனுக்கு இல்லாமல்போயிற்று. குறிப்பிட்ட நாளில் சிறை உடைப்பு நடந்தாக வேண்டும்; அதற்குள் வெளியூர்களிலிருந்து வந்திருக்கின்ற இளைஞர்களுக்கு உணவும் இடமும் கொடுத்தாக வேண்டும். அதற்கு வசதியில்லாமல் போய்விட்டால், என்ன நேருமோ, யாருடைய மனம் மாறுமோ தெரியாது. பல்லாயிரம் பேரில் யாராவது ஒருவன் நடக்கப்போவதை வெள்ளையருக்குச் சொல்லிவிட்டாலும், முதலில் வீரத்தேவன் தலை உருளும்.

மிகுந்த குழப்பத்தோடு பாளையங்கோட்டையில் வந்து இறங்கினான் வீரத்தேவன். நேரே சிங்கத்தேவன் வீட்டிற்கேதான் வந்திருந்தான். அவன் கதவைத் தட்டும்போது கண்ணுத்தாள் உள்ளே பலகாரம் செய்துகொண்டிருந்தாள். சிங்கத்தேவன் வெளியிலே சென்றிருந்தான். யாரோ தட்டுகிறார்கள் என்றெண்ணிய கண்ணுத்தாள், கதவைத் திறக்க வந்தாள். 'சிங்கத்தேவா! சிங்கத்தேவா!' என்று அழைத்த குரல் தனக்குப் பழக்கமான குரலாக இருக்கக் கேட்டாள். வந்திருப்பது தன் அண்ணன்தான் என்ற முடிவுக்கு வந்தாள். வீட்டில் அவளைத் தவிர வேறு யாருமில்லை. கதவைத் திறப்பதா, இல்லையா என்று தயங்கினாள். மெதுவாகக் குரலை மாற்றிக்கொண்டு, 'யாரது?' என்று கேட்டாள்.

'நான்தான், வீரத்தேவன்; சிங்கத்தேவன் இல்லையா?'

கண்ணுத்தாள் திடுக்கிட்டாள். அண்ணனைப் பார்க்க அவள் மனம் துடித்தது. 'அண்ணு' என்று கதறவேண்டும்போலிருந்தது. கதவைத் திறந்து, அண்ணனைப் பார்த்து, நடந்ததெல்லாம் கூறி, கணவனை மன்னிக்கும்படி செய்து விடலாம் என்றெண்ணினாள். ஒரு கணம் இந்த நினைவு உறுதிப்பட்டது. தாழைத்திறக்கக் கைகள் நீண்டன. மறுகணம் அதே கைகள் பின்னுக்கு வந்தன.

'சீச்சீ! என்ன தவறுசெய்யப் போகிறோம்! நாம் என்னதான் சொன்னாலும் அண்ணனுடைய ஆத்திரம் தீராது! கண்டிப்பாக அண்ணனோ, கணவனோ மடிய நேரிடும்.'

—அவள் கதவைத் திறக்க விரும்பவில்லை. கதவு மேலும் பலமாகத் தட்டப்பட்டது. குரல் நடுங்க, 'அவர் இங்கே இல்லை. மத்தியானம்தான் வருவார்!' என்றாள் கண்ணுத்தாள்.

வீரத்தேவனுக்கும் இது பழக்கப்பட்ட குரலாகத் தோன்றிற்று. ஆனால், தன் தங்கையாக இருக்க முடியாது என்ற முடிவுக்கு வந்தான். தங்கையாக இருந்தால் கதவைத் திறக்காமலா இருந்திருப்பாள்!

சிங்கத்தேவன் மீதிருந்த கொஞ்சநஞ்ச சந்தேகமும் நீங்கிவிட்டது. இரவெல்லாம் தூக்கமில்லாமல், அவன் மேனி வெகுவாகத் தளர்ந்திருந்தது. மீண்டும் குதிரையிலேறி, பொம்மையாவைத் தேடிப் புறப்பட்டான்.

வீரத்தேவன் சிவகெங்கையிலிருந்தபோது பொம்மையா பல காரியங்களைச் செய்துமுடித்திருந்தான். பாளையங்கோட்டையின் எல்லா திசைகளுக்கும் நண்பர்களை அனுப்பி, வெளியூர்களிலிருந்து வருகிற இளைஞர்களை அங்கங்கே மடக்கி, சுற்றுப்புற கிராமங்களிலேயே தங்க வைத்திருந்தான். சிறைக்காவலர்களிலேயே இரண்டொரு பேர்களை நண்பர்களாக்கி வைத்திருந்தான். தான் செய்த தவறுக்கு இவற்றின்மூலம் பிராயச்சித்தம் செய்துகொண்டிருந்தான். ஒட்டநத்தம் சுப்பா நாயக்கர், ஆயிரம் பூவராகன்மட்டும் கொடுத்தனுப்பியிருந்தார். அதில் இரண்டு நல்ல குதிரைகளை வாங்கியிருந்தான் பொம்மையா. பொறுப்புமிக்க ஒரு தலைவனுகப் பணியாற்றி வந்தான். சிங்கத்தேவன் பட்டும் படாமலுமே இவற்றில் பங்கு கொண்டிருந்தான். அவன் உதவி இல்லாமலேயே பொம்மையா தன் காரியங்களை முடித்தான். விஷயம் தெரிந்தோ, தெரியாமலோ பாளையங்கோட்டையில் வெள்ளைக்காரர்களின் படைகள் ஏராளமாகக் குவிக்கப்பட்டிருந்தன. வெள்ளைக்காரர்களுக்கு சேவை செய்வதில், அந்தப் படைகள் மனப்பூர்வமாகவே ஈடுபட்டிருந்தன. எட்டையபுரம், மணியாச்சி, புதுக்கோட்டை பாளையங்களிலிருந்து, கும்பினிப் படையில் சேர்ந்த தமிழர்கள் மிக உற்சாகமாகவே இருந்தனர். பாஞ்சைக்கோட்டையிலும், சிவகிரியிலும், ஏழாயிரம் பண்ணையினும் கொள்ளையடிக்கப்பட்ட பொருள்களை, படைவீரர்களே பங்கு போட்டுக் கொள்ளும்படி வெள்ளையர்கள் விட்டுவிட்டார்கள். அதனால், வெள்ளைப்படையின் ஒவ்வொரு வீரனும் தன்னை ஒரு அதிகாரியாகவே கருதிக்கொண்டிருந்தான். பயன் அதிகமாக இருந்த காரணத்தால், வெள்ளைப்படையில் சேவை புரிவதைப் பெரிதாகவே அவர்கள் மதித்தார்கள். கட்டபொம்மன் படையிலிருந்தவர்களிலேயே சிலர், வெள்ளைப் படையில் சேர்ந்திருந்தார்கள். மேற்கத்திச் சாராயம் வேண்டுமளவு அவர்களுக்குக் கிடைத்தது. பாளையங்கோட்டையில் இவ்வளவு படைகளும் தங்கி இருந்ததால் பீதியடைந்தவர்கள் பலர், ஊரைவிட்டே வெளியேறினர். ஆனால், பெண்களைக் கெடுக்கும் விஷயத்தில் மட்டும் வெள்ளைக்காரர்கள் கண்டிப்பாக இருந்தனர். அப்படிச் செய்யும் எந்த வீரனையும் அவர்கள் கொல்லத் துணிந்தனர். சில வீரர்கள் வெள்ளைக்காரர்களிடம் அன்பு கொண்டதற்கு இதுவும் ஒரு காரணம்.

பொம்மையாவைத் தேடிப் புறப்பட்ட வீரத்தேவன், நகர் முழுதும் அலைந்துவிட்டு, பழைய கோட்டைக்கே வந்து சேர்ந்தான். ஆனால் அவன் எதிர்பார்த்ததற்கு மாருக, அந்தக் கோட்டைக்குள் ஆங்கிலத் தளபதிகள் பலர் இருந்தார்கள். கோட்டைக்காவலர்கள் யாரையும் சந்திக்க அவனால் முடியவில்லை. குடியும், கூத்துமாகக் கோட்டை அமர்க்களப்பட்டுக் கொண்டிருந்தது. அங்கும் தங்க வழியின்றி அலுப்போடு திரும்பினான் வீரத்தேவன். 'எங்கே தொலைந்தான் இந்தப் பொம்மையா?' என்று, தனக்குத் தானே ஆத்திரமாகக் கேட்டுக் கொண்டான். மறுகணம் ஆத்திரம் தணிந்து பயம் பிறந்தது. ஒருவேளை வெள்ளைக்காரர்களிடமே அகப்பட்டுக்கொண்டு விட்டானோ?-இல்லை சலித்துப் போய் ஊரைவிட்டே புறப்பட்டு விட்டானோ? புரட்சிக் கூட்டத்தைச் சேர்ந்த ஒரு இளைஞனைக் கூடக் காணோமே! — அவன் மனம் சொல்லொணுத் துயரில் ஆழ்ந்தது. யாரையாவது சந்தித்து விபரங்களைத் தெரிந்து கொண்டாலொழிய, மனதுக்கு அமைதி இல்லை. உடல் தளர்ச்சி கூட அவனுக்குப் பெரிதாகத் தோன்றவில்லை. அப்படியே கொக்கரகுளத்துக்கு வந்தான். தாமரபரணியாற்றில் குளித்தான். கட்டியிருந்த ஆடையையே உலர்த்திக் கட்டிக்கொண்டு, படுத்திருந்த குதிரையை எழுப்பினான். தட்டித் தட்டிப் பார்த்தான். 'ஓ'வென்று அலறினான். குதிரை இறந்துபோய்க் கிடந்தது. வீரத்தேவனுடைய இலட்சியம் அவனுடைய களைப்பைப்போக்கிற்று. இரவு பகல் தூக்கமில்லாமல் உழைக்க அவன் இலட்சியம் உறுதுணையாய் நின்றது. ஆனால் குதிரை உடல் தளர்ந்து, உயிர் துறந்தது.

குதிரை இல்லாமல் அவனால் எங்கும் போக முடியாது. அவன் கையில் இருந்ததோ நாலு பூவராகன். திக்கற்றவனாய், திசை தெரியாதவனாய், பித்துப் பிடித்தவனாய், குதிரை கிடந்த இடத்தை விட்டு நடந்தான் வீரத்தேவன். ஒரு இடியாப்பக் கடைக்குள் நுழைந்தான். நல்ல பசி எடுத்தது. நிறையச் சாப்பிட்டான். புறப்பட்டான்.

களைப்புத் தீர்ந்ததுபோலிருந்தது. ஆனால் தூக்கம் கண்களைச் சுற்றவைத்தது. அப்படியே ஆற்றங்கரை மண்டபத்தில் போய்ப் படுத்துத் தூங்கிவிட்டான்.

சிறை உடைக்கத் திட்டமிட்ட நாள் நெருங்கிக் கொண்டிருந்தது. மறுநாள் சிறையை உடைத்தாக வேண்டும்! அவனிடம் குதிரையுமில்லை; யாரையும் சந்திக்க அவனால் முடியவுமில்லை! தூங்கி விழித்த அவன் கண்களுக்கு நேரே, உலகம் பயங்கரமாகத் தோற்றமளித்தது. மெதுவாக எழுந்து பாளையங்கோட்டையை நோக்கி நடந்தான்.

அந்தி பட்டுவிட்டது. பாளையங்கோட்டை நெருங்க நெருங்க, அவன் கண்ட காட்சி அவனைத் திகைக்க வைத்தது. பல திசைகளிலும் தீவட்டி வெளிச்சம் தெரிந்தது. புரட்சி ஒலிகள் கேட்டன. அவன் மெய் சிலிர்த்தது. துள்ளிக் குதித்து ஓடினான். தான் யார் என்பதைச் சொல்லாமல் ஒரு கூட்டத்தில் போய்ச் சேர்ந்துகொண்டான். அவனுக்கும் அந்த ஒலிப்பழக்கம் இருந்ததால் அவர்கள் சேர்த்துக் கொண்டார்கள். இரவு அவர்களுடனேயே தங்கினான்.

காலைப் பொழுது பலபல வென்று விடிந்தபோது, அங்கிருந்தவர்களெல்லாம் பலவகையில் மாறினார்கள். விறகு வெட்டிகள், புல்கட்டுக்காரிகள், காய்கறி வியாபாரிகள், வேப்பெண்ணை வியாபாரிகள், பண்டாரங்கள், சாமியாடிகள், பகல் வேஷக்காரர்கள் இப்படி ஒவ்வொருவரும் ஒவ்வொரு வேஷமணிந்து கொண்டார்கள். எல்லோரும் சிறைச்சாலைக்கு எதிரே இருந்த சந்தைப் பொட்டலை நோக்கி நடந்தார்கள். வெள்ளைப் படையினருக்கே அது ஆச்சரியமாக இருந்தது. பொங்கல்தான் முடிந்துவிட்டதே, இன்றையச் சந்தைக்கு ஏன் இவ்வளவு கூட்டம் வருகிறது என்று ஆச்சரியப்பட்டார்கள் வெள்ளைப் படையிலிருந்த தமிழ் வீரர்கள். ஆனால் சிறை உடைபடப் போகிறது என்ற சந்தேகம் யாருக்கும் எழவில்லை. புதிய கள் விற்பவர்களே அங்கு அதிகமாகக் கூடியிருந்தார்கள். சிலர் கள்ளிலே நஞ்சு கலந்து கொண்டு வந்திருந்தார்கள். புரட்சிவீரர்கள் யாராவது அந்தப் பக்கம் வந்தால், மோதிரவிரலால் பானையின்மீது மூன்று தட்டுத் தட்டுவார்கள். 'இது நஞ்சு கலந்தது!' என்று அதற்குப் பொருள்!

வெள்ளைச் சிப்பாய்களும், சிறைக் காவலர்களும் கள்ளை வாங்கி நிறையக் குடித்தனர். புரட்சிப் பெண்களும் காசு வாங்காமலேயே அவர்களுக்குக் கொடுத்தனர். அவித்து வைத்த சோளக் கதிர்களை வாங்கித் தின்று, கள்ளுண்ட காவலர்கள் கூத்தாடினர். நாய்களைக் கொன்று அவற்றின் மாமிசத்தைச் சுட்டுக் கொண்டு வந்திருந்தார்கள் சிலர். பணம் வாங்காமலேயே அதை வெள்ளைச் சிப்பாய்களுக்குக் கொடுத்தார்கள். அதைத் தின்றுவிட்டுத் 'தண்ணீர்! தண்ணீர்!' என்று கத்தி, மேலும் மேலும் கட் குடித்து, சுருண்டு விழுந்தனர் வெள்ளைச் சிப்பாய்கள் பலர். இதற்குள் பண்டாரம் வேடத்திலிருந்த வீரத்தேவன் ஒவ்வொரு பகுதிக்கும் சென்று, தான் சங்கு ஊதி சேகண்டி அடித்ததும் எல்லோரும் சிறையைநோக்கிப் பாய வேண்டும் என்று சொல்லிக் கொண்டு வந்தான். பாம்பாட்டி வேடத்திலிருந்தவர்கள் பாம்புகளைத் தயாராக வைத்துக் கொண்டிருந்தார்கள். குதிரைகளில் வந்து தாக்கும் வெள்ளைக்காரர்கள்மீது மட்டும் பாம்புகளை வீச வேண்டுமென்பது ஏற்பாடு.

நடக்கும் நிகழ்ச்சிகளைக் கவனித்துக் கொண்டிருந்தான் வெள்ளைக்கார கர்னல் ஒருவன், அவனுக்குச் சந்தேகம் தட்டிவிட்டது. கையில் ஒரு சவுக்கோடு வேகமாகச் சந்தைக்குள் நுழைந்தான். சுருண்டுகிடந்த தன் சிப்பாய்களை, சவுக்கால் உதைத்தான். இதைக் கண்டு ஆத்திரமடைந்த புரட்சிப் படைகளில் ஒருவன், தலையிலிருந்த விறகுச்சுமையைக் கீழேபோட்டுவிட்டு, கையிலிருந்த கோடரியால் அந்தக் கர்னலை வெட்டி வீழ்த்தினான். காரியம் கெட்டு விடப் போகிறதே என்று பயந்த வீரத்தேவன், சூட்டோடு சூடாக எல்லாம் நடந்துவிடட்டும் என்று எண்ணி, கையிலிருந்த சேகண்டியை அடித்து, சங்கு ஊதினான்.

அஞ்சுகம்.

'ஓ'வென்ற பேரிரைச்சலோடு, புரட்சிக்கூட்டம் சிறையை நோக்கிப் பாய்ந்தது; சிறைக் காவல்காரர்களைக் கொன்று குவித்தது; சிறைக்கதவை உடைத்து உள்ளே புகுந்தது. உள்ளே தயாராக வைக்கப்பட்டிருந்த ஒரு பீரங்கி, புரட்சிக்காரர்களை நோக்கிச் சுட்டது. அதன் பேய் வாயையும் மீறி, புரட்சிவீரர்கள் உள்ளே புகுந்தனர். சிலர் செத்து விழுந்தனர். சிறையின் ஒவ்வொரு அறையும் உடைக்கப் பட்டது.

உள்ளே இவ்வளவும் நடந்து கொண்டிருக்கும்போது, பக்கத்து முகாமிலிருந்த வெள்ளைப் படை தயாராக ஓடிவந்து சிறை வாசலில் நின்றது. உள் சுரங்க வாசலை உடைத்து ஊமைத்துரையை இழுத்துக்கொண்டு உள்ளே நுழைந்தான் வீரத்தேவன். சுரங்கத்துக்குள்ளேயே கொஞ்சநேரம் நின்றார்கள் இருவரும். கைதிகளும், புரட்சிவீரர்களும் ஒன்றாகச் சேர்ந்து, வெளியிலிருந்த வெள்ளைச்சிப்பாய்களையும் எதிர்த்தனர். கொல்லப்பட்டவர்களின் துப்பாக்கிகளைப் பொறுக்குவதில், சிங்கத்தேவனும், பொம்மையாவும் கண்ணுங்கருத்துமாயிருந்தனர். நூறு துப்பாக்கிகளுக்குமேல் பொறுக்கிக் கட்டி இரண்டு குதிரைகளின்மேல் ஏற்றிக்கொண்டு அவர்கள் புறப்பட்டனர். இறந்தவர்கள் போக மிஞ்சிய புரட்சி வீரர்கள், வேறு வேறு திசைகளில் ஓடி மறைந்தார்கள்.

சுரங்கத்தின் வழியாகப்போன ஊமைத்துரையும், வீரத்தேவனும் பின்கோட்டைக்குள் ஏறும் போது அங்கே வெள்ளைக்காரச் சிப்பாய்கள் யாருமில்லை. கோட்டையின் காவலர்கள் இரண்டு குதிரைகளைத் தயாராய் நிறுத்தி வைத்திருந்தார்கள். அவர்கள் காலைத்தொட்டு வணங்கிவிட்டு, வீரத்தேவனும் ஊமைத்துரையும் குதிரைமீதேறிப் பறந்தார்கள். காட்டிலிருந்த ஒரு மண்டபத்தருகில் அவர்கள் வந்த போது, ஏற்கெனவே அங்கு ஐநூறுக்கு மேற்பட்ட புரட்சி வீரர்கள் வெற்றிப் பெருமிதத்தோடு அமர்ந்திருப்பதைக் கண்டார்கள். ஊமைத்துரையையும், வீரத்தேவனையும் அவர்கள் ஓடிப்போய்த் தழுவிக்கொண்டார்கள். அந்த ஆரவாரத்திடையே 'வீரத்தேவா!' என்று ஒரு குரல் கேட்டது. 'அத்தான்!' என்று ஒரு குரல் ஆசையோடு எழுந்தது. வீரத்தேவன் திடுக்கிட்டுக் கவனித்தான். பூரி இராமசாமித் தேவரும், அஞ்சுகமும் அங்கு நின்றார்கள். தன்னை மறந்த வீரத்தேவன், 'அஞ்சுகம்!' என்று கூவி, அவளைப் போய்த் தூக்கிக்கொண்டான். இராமசாமித்தேவர் ஆவலோடு, வீரத்தேவனைப் பார்த்து 'சின்ன மருதுபாண்டியர் எங்கே!' என்று கேட்டார். வீரத்தேவன் திடுக்கிட்டான்.

தொடரும்

ராஜபார்லி பிஸ்கட்ஸ்
குழந்தைகளுக்கு சிறந்த ஆகாரம்
PRO: A. சங்குபிள்ளை, 115, திண்டுக்கல்ரோடு, மதுரை.

புலித்தேவனா, கட்டபொம்மனா?

ப. புகழேந்தி

5

தமிழக வரலாற்றிலேயே (அப்படி உருப்படியாக ஏதாவது இருந்தால்!) குழப்பம் மிகுந்த ஒரு நூற்றாண்டு என்று எதையாவது குறிப்பிட வேண்டுமென்ருல், (கி. பி.) பதினெட்டாம் நூற்ருண்டைத்தான் குறிப்பிட வேண்டும்.

கி. பி. 1736-ஒரு சோகமயமான ஆண்டு!

இருநூறு ஆண்டுகளாகத் தமிழகத்தில் புகழுடன் விளங்கிய மதுரை நாயக்க மன்னர் ஆட்சி, சண்டாளன் சந்தா சாகிபின் சதியால், அரசி மீனுட்சியின் தற்கொலையோடு அந்த ஆண்டு முடிந்து போயிற்று. அதைத் தொடர்ந்து நாடெங்கும் ஒரே குழப்பம்!

நாயக்க மன்னர் ஆட்சிக்குப்பின் தமிழகத்தில் நிலையான, முறையான எந்த அரசும் இல்லை. அதற்குமுன் பலகாலமாக நிலைத்து நின்ற சேர, சோழ, பாண்டிய அரசுகளோ, அவற்றின் அழுத்தமான பதிப்புகள் என்று குறிப்பிடப்படும் எவையுமோ இல்லை. நாடெங்கும், குறிப்பாக பாண்டி மண்டலம் முழுமையும் சின்னஞ்சிறு பாளையங்கள் தோன்றி, அவற்றில் தனித்தனி அரசுகள் ஏற்பட்டன. அதிலும் இத்தகைய பாளையங்கள் திருநெல்வேலிச் சீமையில் ஏராளமாக உருப்பெற்றன. பாளையங்களை, சிறந்த வீரர்கள் ஆண்டனர். வரி வசூலித்து, தேவை அறிந்து, செய்ய வேண்டியவற்றைச் செய்து, அதன் மூலம் மக்கள் நம்பிக்கையைப் பெற்றுப் பாளையங்களின் அதிபதிகளாக, மன்னர்களாக அவர்கள் திகழ்ந்தார்கள். பெரிய அரசுகளுக்கு உட்பட்டுப் பழகிப்போன மக்களும் தங்களுக்குள் உருவாகியிருந்த அத்தகைய அரசர்களுக்குக் கட்டுப்பட்டே வாழ்ந்தனர்.

அப்போது பாளையக்காரர்களை விட அதிக ஆற்றல் பெற்ற சிலர், பாளையங்களைத் தங்களுக்குக் கீழுள்ளனவாக்கி, அவற்றிலிருந்து திறைப்பணம் வசூலிக்க முயன்றனர்.

ஆர்க்காட்டு நவாபு
மகாராட்டிரர்கள்
சந்தா சாகிபு

ஆகிய மூவரும் ஒருவருக்கொருவர் போட்டி போட்டுக்கொண்டு வசூலுக்குக் கிளம்பினர்.

1744-ஆம் ஆண்டு நவாபுவாக்கப்பட்ட அன்வர் உத்தின், ஆம்பூர்ப் போரில் கொலையுண்டது காரணமாக **முகமது அலி** என்பான் ஆர்க்காட்டு நவாபுவாகப் பிரகடனப்படுத்தப்பட்டான். திருநெல்வேலிச் சீமையின் பாளையங்களில் திறைப்பணம் வசூலிக்க எண்ணம் கொண்ட அவன், 1751-ல் தனது உடன்பிறந்தானுகிய **அப்துல் ரஹீமைப்** படையுடன் அனுப்பிவைத்தான். ஆனுல், எந்தப் பாளையக்காரரிடமிருந்தும் எதுவும் பெற முடியவில்லை அப்துல் ரஹீமால்.

இந்த நேரத்தில், சந்தா சாகிப் சும்மா இருந்துவிடவில்லை. முகமது அலிக்கு எதிராக பாளையக்காரர்கள் அனைவரும் தன்னுடன் சேர வேண்டுமெனவும், அப்படிச் சேர்ந்தவர்கள் (இதுவரை அவர்கள் செலுத்தாத) பழைய திறைப்பணம் தரவேண்டியதில்லை எனவும், இனி உள்ளவற்றை மட்டும் தன்னிடம் அளிக்கும்படியும் கேட்டுக்கொண்டான். இதைத் தொடர்ந்து, அவனது நண்பனுன ஆலம்கான் மதுரையைக் கைப்பற்றித் திருநெல்வேலிச்சீமையில் கப்பம் வசூலிக்கத் தொடங்கினுன்.

சந்தா சாகிபுவால் தரப்படும் இந்தத் தொல்லையைக் கண்டு மனம் பதறிய ஆர்க்காட்டு நவாபு, கிழக்கிந்தியக் கம்பெனி (ஆங்கிலேயரைத் தனக்கு உதவக் கருணை மனுப்போட்டான்.

அப்போது குடியிருந்த பகுதியாகிய சென்னைக் கோட்டை தவிர ஒரு அடி மண்கூட ஆங்கிலேயருக்கு இங்கு சொந்தமாக இல்லை. வாணிபம் செய்ய வந்த இடத்தில் தங்கள் ஆட்சியையும் வேரூன்ற நினைத்த அவர்கள், ஆர்க்காட்டு நவாபு அளித்த இந்த அரிய சந்தர்ப்பத்தை நல்ல ராஜதந்திரக் கண்ணேட்டத்துடன் பயன்படுத்திக் கொண்டனர். தாங்கள் இப்படிப்பட்ட நேரத்தில் அளிக்கும் படை உதவிகளின் மூலம், சிறுகச் சிறுகத் தங்கள் ஆட்சியையும், அதிகாரத்தையும் வளர்த்து, உறுதிப்படுத்திக் கொள்ள முடியும் என்று அவர்கள் செய்து வைத்திருந்த முடிவைச் செயல்படுத்தச் சந்தர்ப்பம் ஏற்பட்டதற்காகப் பெரிதும் மகிழ்ந்தனர்.

கி. பி. 1755ல் ஆங்கிலேயரால் அளிக்கப்பட்ட **கர்னல் ஹீரான்**, நவாபுவின் அண்ணன் **மாபூஸ்கான்**, நவாபுவின் நம்பிக்கைக்குப் பெரிதும் பாத்திரமான வீரன் **கான்சாகிபு** ஆகியோரின் தலைமையில் ஒரு பெரும் படை தெற்கு நோக்கிப் புறப்பட்டது. இந்தப் படையெடுப்பே யாருக்கும் திறைப்பணம் செலுத்த மறுத்த, சுதந்திர உணர்வு கொண்ட தென்சீமைப் பாளையங்களை அடக்க எழுந்த முதற்பெரும் படையெடுப்பு என்று குறிப்பிடப் படுகிறது. இந்தப் படையில் இரண்டாயிரம் இந்தியச் சிப்பாய்களும், ஐநூறு ஐரோப்பியரும் இருந்தனர்.

படை ஆர்ப்பாட்டம் செய்துகொண்டே கிளம்பியது. வழியில் ஆலம்கானுல் கைப்பற்றப்பட்டிருந்த பல பகுதிகள் அதன் பார்வையில் பட்டன. மதுரைப் பெருநகர் படையின் ஆணைக்குள் அடங்கியது. பிற பகுதிகளும் கைப்பற்றப்பட்டன. படை தொடர்ந்து தெற்கு நோக்கிப் பயணம் செய்தது. பாளையக்காரர்களை அதட்டி, உருட்டி, தாராத கடன்காரனிடம் விடாது வசூல் செய்யும் வட்டிக் கடைக்காரனைப்போல கப்பப்பணத்துக்காகக் கைநீட்டியது.

பாஞ்சைப்பதியான் பொல்லாப் பாண்டியனும், நெற்கட்டுஞ் செவ்வலான் புலித்தேவனுமே அக்காலம் ஆர்க்காட்டு நவாபுக்கும், ஆங்கிலேயர்க்கும் 'வில்லர்'களாகத் தோற்றமளித்தனர்.

திருநெல்வேலிச்சீமைப் பாளையங்கள் அப்போது இரண்டு பிரிவுகளாக இருந்தன. அவை 'கீழ்த்திசைப் பாளையங்கள்','மேற்றிசைப் பாளையங்கள்' எனப் பெயர்பெற்றன. கிழக்குப் பாளையங்களுக்குத் தலைமை தாங்கியவன் பாஞ்சாலங்குறிச்சிப் பாளையக்காரன் **பொல்லாப் பாண்டிய கட்டபொம்மு நாயக்கன்** (1736-1760) என்பவன். இவன் வீரபாண்டியக் கட்டபொம்மனின் பாட்டன். மேற்குப் பாளையங்களின் தலைவனே வீரன் **புலித்தேவன்**. சங்கர நயினுர் கோயில் தாலுகாவைச் சேர்ந்த நெற்கட்டுஞ் செவ்வலின் (இப்போது ஆவுடையாபுரம்) அதிபதியான புலித்தேவன், இணையற்ற வீரன். அறிவாற்றல் நிரம்பப்பெற்ற தலைசிறந்த அரசியல் அறிஞன். போர்த்திறனில் ஈடற்ற சூரன். 'அஞ்சா நெஞ்சம் படைத்தவர். இராணுவ முறையில் கைதேர்ந்தவர்களும் பாராட்டும்படியான போர்ப்பயிற்சியின் நுண்ணறிவையும், படைகளுக்கு உற்சாகமூட்டும் பேச்சுத்திறனையும், ஒரே நாளில் நாற்பது ஐம்பது மைல்கள் தூரம் போர்த்தளவாடங்களுடன் களைப்பில்லாமல் நடக்கும் ஆற்றலையும் அடைந்திருந்ததுடன், பார்வைக்கு உயர்ந்து, நிதானமான ஆகிருதியையும், பரந்து விசாலமான கண்களையும், நெஞ்சையும், புயங்களையும், ஆஜானுபாகுவான கைகளையும், சிறுத்து நீண்ட விரல்களையும் உடையவராய் இருந்தார்...' என்று புலித்தேவனைப் பற்றி 'திருநெல்வேலி கெஜட்' சொல்லுகிறது.

1755-ல் கர்னல் ஹீரான் படை முதன் முதலாகப் பாஞ்சாலங்குறிச்சியின்மீது பாய்ந்தது. சிறந்த வீரன் அல்லாத, கிழக்குப் பாளையங்களின் அதிபதியான பொல்லாப் பாண்டியன் படையை எதிர்த்து முரசு கொட்டவில்லை; மாற்ருரின் படையெடுப்பு தனது பூமியின் சுதந்திர உணர்வையே சோதிக்க வந்திருக்கிறதே, வாழ்வா, சாவா எனப் பார்த்துவிடுவோம் என்று கச்சைகட்டி எதிர்க்கவில்லை. தனது எல்லையைப் படை அடையுமுன்பே சமரசத்திற்கு ஆள் அனுப்பிவிட்டான். கப்பத்தைக் கட்டிவிடுவதாகவும், ஆயினும் தவணை தரவேண்டுமென்றும், தரவேண்டிய அத்தொகைக்காக ஆள் பிணை தருவதாகவும் அவன் சார்பில் கூறப்பட்டது. அதனை ஒப்புக்கொண்ட படை, பொல்லாப் பாண்டியனுக்கு வேண்டிய முக்கியமான சிலரைப் பணயமாகத் தன்னிடம் வைத்துக் கொண்டது.

கீழ்த்திசைப் பாளையங்களின் தலைமை இவ்விதமாகவே, பிற சிறு சிறு பாளையங்களும் படைக்குப் பயந்து, கப்பம் கட்ட ஒப்புக் கொண்டன. அதே நேரத்தில், திருச்சிக்கு வந்துள்ள ஆபத்தைத் தவிர்க்க உடனடியாகப் புறப்படும்படி படைக்கு மேலிடத்திலிருந்து உத்தரவு வந்து சேர்ந்தது. எனவே, படை திருச்சி திரும்பவேண்டியதாயிற்று.

படை திருச்சி திரும்புமுன், அருகிலுள்ள நெற்கட்டுஞ் செவ்வல் புலித்தேவனை அடக்கி உதவுமாறு மாபூஸ்கான் மன்ருடிக் கேட்டுக் கொண்டான். அதனை ஒப்புக் கொண்ட கர்னலும், புலித்தேவன் கோட்டையைத் தாக்கும்படி படைக்கு உத்தரவிட்டான்.

நெற்கட்டுஞ் செவ்வலைக் கர்னல் ஹீரான் படை தாக்கியது. பொல்லாப் பாண்டியனைப்போல் பயந்து நடுங்கி கப்பம் கட்ட ஒப்புக் கொண்டுவிடவில்லை புலித்தேவன்; தவணை கேட்டு, தனது ஆட்களைப் பணயம் வைக்கவும் இல்லை. எதிர்த்து நின்ருன். தனது அரசியல் அறிவைப் பயன்படுத்தி, கர்னலின் படை வலிமையின் இரகசியங்களை அறிந்து தீவிரமாகப் போராடினுன்.

இருதரப்புப் படையும் மோதிக் கொண்டன. விட்டுக்கொடுக்காமல் போராடினுர்கள் புலித்தேவன்படையினர். கர்னல் செய்வதறியாது திகைத்தான். ஏதாவது சமாதானம் செய்துகொள்ள விரும்பினுன்.

'இருபதினுயிரம் ரூபாய் கொடு; இப்படியே போய்விடுகிறேன்' என்ருன்.

'எங்கள் தாயகம் இது. எதற்கு உனக்கு திறைப்பணம்? இருபது சல்லிக்காசுகள்கூட இல்லை, போ!' என்ருன் புலித்தேவன்.

எந்த முடிவுக்கும் வரமுடியவில்லை கர்னலால். சோறும், தண்ணீரும் சரியாகக் கிடைக்காததால், வாடி வதங்கிய படையினர் உட்கலகம் புரியத் தொடங்கினர். வேறு வழி தெரியாத ஹீரான், வெட்கத்தோடும் வேதனையோடும் படையை

— 10-ம் பக்கம் —

நாகை தி. மு. கழகம்

"30-11-58 அன்று நாகையில் நடைபெற இருந்த நாகை தி. மு. க. வளர்ச்சி நிதிச் சிறப்புக் கூட்டம், சில தவிர்க்கமுடியாத காரணங்களால் ஒத்திவைக்கப் பட்டுள்ளது" என நாகை தி.மு.க. செயலாளர் திரு. கே. வி. இராமன் அறிவிக்கிருர்.

முல்லையே, மணக்காதே! முழுநிலவே, ஒளிராதே!

— 4-ம் பக்கத் தொடர்ச்சி —

ஸ்டாலின் அவரை விட்டுவைத்திருந்தது விந்தையே!

இந்நூலை இரண்டாம் உலகப் போருக்குப்பின் எழுதத் தொடங்கிய அவர், சோர்வினால் ஒதுக்கிவைத்துவிட்டார். பின் ஸ்டாலின் இறந்ததும் ஏற்பட்ட புதிய நம்பிக்கைகளால் விரைந்து எழுதினார். 1955-ல் முற்றுப்பெற்றது. ஏறத்தாழப் பத்தாண்டுகளாக உருவான, இக்கதையில் உருசியாவின் கடந்த 50 ஆண்டு நிகழ்ச்சிகள் படம் பிடித்துக் காட்டப்பட்டுள்ளன.

டாக்டர் சிவாகோ என்பவன் இதன் தலைவன். சிவாகோ புரட்சி வெடித்தபோது அதில் கலந்து போரிடுகிறான். வெற்றி முழங்க, அரசுக்கட்டிலேறிய பொதுவுடைமையர் அவன் கனவுகளைச் சிதைக்கின்றனர். சொன்ன சொல்லுக்கு மாறாக, மனிதத்தன்மையற்ற வெறிக்கூத்தாடுகின்றனர். அவன் மனம் சோர்கிறான். பெண் உறுப்பினருள் முதலானவள் லாரிசா. இந்த உறுப்பைச் சுட்டிக்காட்டி, "அது கற்பனையா? உண்மையாகவே அப்படி ஒரு பெண் இருக்கிறாளா?" என்று கேட்டார், நாக்கைக் காணச் சென்ற ஸ்வீடிஷ் பேராசிரியர் டாக்டர் நில்ஸ் ஆக் நில்ஸ்ஸன் என்பார். அவர் அண்மையில் நாக்கைக் காணச் சென்றார். நாக் சொன்னார்:

"ஆமாம்! அவள் இன்னும் வாழ்கிறாள், இந்நாட்டில். அவள் எனக்கு வேண்டிய நெருங்கிய பெண்!"

லாரிசாமட்டுமல்ல. டாக்டர் சிவாகோவும் வாழும் உருசிய மனிதன் ஒருவன்தான்.

அந்த நூலே அவரது அனுபவங்களின் கொத்துதான். நூலை முடித்ததும், அதைப் பல ஏடுகளுக்கு அனுப்பினார், வெளியிட. அத்துணை (உருசிய) ஏடுகளும் அதனை வெளியிடவுமில்லை; வெளியிட மறுக்கவுமில்லை.

1954 ஏப்ரலில் "சிநாம்யா" என்ற ஏடு சில கவிதைகளை வெளியிட்டது. அவை "டாக்டர் சிவாகோ என்ற நெடுங் கதையில் வரும் பாடல்கள்" என வெளியிடப்பட்டன. அக்கவிதைகள் பாஸ்டர் நாக் எழுதிய விளக்க முகவுரை ஒன்றுடன்கூட வெளியாயின: "இந்நெடுங் கதை, அநேகமாக வரும் கோடைக்குள் முடிந்துவிடும். இது 1903 முதல் 1929 வரை உள்ள காலத்தை முக்கியமாய்ப் பிரதிபலிக்கும். அத்தோடு நம் அன்னை மண்ணின் விடுதலைப் போரைப்பற்றிய முகவுரைக் கவிதை ஒன்றும் இணையும். இதன் கதாநாயகன் யூ. ஏ. சிவாகோ எனும் ஒரு மருத்துவன்; சிந்தனைவாதி; உண்மையைத் தேடுபவன்!"

இப்படி முன்னுரையுடன் கூடிய கவிகள் வெளியான போதும் அவர் அய்யுறவில்லை; தன்னூல் வெளியாகும்தாயகத்திலேயே என அவரை நம்ப வைத்தது, இந்தச் சேதியுமாகும்.

தன்னூலை எழுத எழுதத் தன் நட்பினர்பால் தந்து படித்துக் கருத்து அறிவது அவர் வழக்கம். இந்நிலையில் ஓர் உருசிய எழுத்தாளர் கைது செய்யப்பட்டார். அவர் வீட்டில் கைப்பற்றப்பட்டவற்றுள் "டாக்டர் சிவாகோ"வின் சில பகுதிகளும் இருந்தன. யார் அதை எழுதியவர் எனத் தெரிந்தும் அரசினர் ஏதும் நடவடிக்கை எடுக்காததால், தன் நூலில் "தவறு" ஏதும் இருப்பதாக எண்ணவில்லை, நாக்.

மற்றொரு சமயம், உருசிய எழுத்தாளர்-நாக்கின் நட்பினர் பலர் கைது செய்யப்பட்டனர்; மறைக்கப்பட்டனர். அப்போது அரசின் அலுவலர் சிலர் ஒரு அறிக்கையில் கையெழுத்திட்டுத் தருமாறு நேரில் வந்து கேட்டனர். "கட்சித் தலைமையர் செய்பவற்றை அப்படியே ஒப்புகிறேன்" என்பது அறிக்கையின் சாரம். "நான் கையொப்பமிட மறுத்தேன். என் மனைவி வயிற்றுப் பிள்ளைக்காரியாய் இருந்தாள். அதைச் செய்யவும் மன்றாடினாள், ஏது ஆகுமோ என அஞ்சி. நான் மறுத்துவிட்டேன்! எது நேரினும் ஏற்கத் துணிந்தேன். எதிர்பார்த்ததற்கு மாறாக நான் சிறைக்கு அழைத்துச் செல்லப்படவில்லை.

பின்னால் என் நட்பினர் சொல்லினர்—'நாங்கள்தான் உனக்காக வாதாடி இடர் நேராது காத்தோம்!' என. ஒரு போது எழுத்தாளர் ஊதியத்தைக் குறைத்தனர். அப்போதும் நான் ஒன்றும் பேசவில்லை. இந்நிலையில் எனக்குப் புதியநம்பிக்கை தான் எழுந்தது!" எனஅவர் சொல்கிறார்.

நூலைப் பெற்ற சில ஏடுகள் "முதலில் கதையைச் சுருக்கி வெளியிடுவோம். பின்னர் முழு நூலாக வெளியிடலாம். ஏற்பின் சுருக்கி அனுப்புக!" என்றன. டால்ஸ்டாய்கூடத் தனது "போரும் அமைதியும்" என்ற நெடுங் கதையை அப்படித்தான் வெளியிட்டானும் முதலில். பின்னர் தான் எழுத்துக்கு எழுத்து நூலாக வந்தது. நாக் இதனை ஒப்பினார். இது 1956-ல் நடந்தது. சுருக்கப்பட்ட கதை வெளி வந்ததா எனத் தெரியவில்லை.

இந்நேரத்தில்தான் அரசாங்கம், சோவியத் எழுத்தாளர் மன்றம்மூலம் தன் கருத்தைத் தெரிவித்தது, "ஏன் வெளியிடவில்லை?" என்பதற்காக.

"அரசினர் சொல்லினர்; அது ஒரு எளிய நூலாம்; அது கவிஞன் என்ற முறையில் எனக்கு இருக்கும் மதிப்பினைக் கெடுத்துவிடுமாம். இது சாதாரணமாக ஒரு மழுப்பல்தான். எழுத்தாளன் தன் போக்கில் விடப்பட வேண்டும். அவன் வாழவும் தன்னைத்தானே வளர்த்துக்கொள்ளவும் அனுமதிக்கப்பட வேண்டும். (கவிஞன் என) நான் பெற்ற பெயர்க்காக, நானே அடிமையாய் இருக்க விழையவில்லை" என்கிறார் நாக்.

சோவியத் எழுத்தாளர் மன்றத்தின் பெயரால், அதனைச் சேர்ந்த அலெக்சாண்டர் சர்க்கௌவ் என்பான், நாக்கின் நூல் அச்சேறுவதைத் தடுத்துவிட்டான். ஆண்டன் செக்காவிற்குப்பின் உரை நடை வளத்தைக் காட்டும் தேர்ந்த எழுத்தாளன் எனப்படும் நாக்கின் நூலைச் சொந்த மண்ணில் வெளியிட வாய்ப்பில்லை.

தன்னாட்டில் வழியில்லை என்றதும், அதை இத்தாலியப் பொதுவுடைமை இயக்கத்தைச் சேர்ந்த நூல் வெளியீட்டாளன் பெல்ட்ரிநெல்லி என்பானுக்கு அஞ்சலில் அனுப்பிவைத்தார். இதை சோவியத் எழுத்தாளர் மன்றம் நன்கு அறியும். '56-ல் நூல் அனுப்பப்பெற்று '57-ம் ஆண்டும் வந்துவிட்டது. உருசியாவில் நூல் வெளிவரவில்லை. இத்தாலிய மொழி பெயர்ப்பு வெளிவரும் நிலை. ஆங்கிலத்திலும், பிரெஞ்சிலும் மொழி பெயர்ப்பு வேலைகள் நடக்கின்றன, விரைந்து. இவை நடக்கையில் அவனுக்கு ஒரு தந்தி வந்தது. சோவியத் எழுத்தாளர் மன்றத்தின் நெருக்கடியால் அனுப்பப்பெற்ற இத் தந்தியில் நூலின் கைஎழுத்துப் படியைத் திரும்ப அனுப்பும்படி எழுதியிருந்தார் நாக். பெல்ட்ரிநெல்லி மறுத்துவிட்டான், ஒப்பந்தத்தை முறித்துக்கொள்ள.

எப்படியும் நூலைத் திரும்பப் பெற வேண்டும் என்பதற்காக அலெக்சாண்டர் சர்க்கௌவ்வே நேரடியாக மிலான் நகருக்குச் சென்றான். உலக உரிமை பெற்றிருந்த பெல்ட்ரிநெல்லியை, இத்தாலியப் பொதுவுடைமை இயக்கத்தின்மூலமும், இத்தாலியிலிருந்த சோவியத் தூதுவர் நிலையத்தின் மூலமும் அணுகினர். "பாஸ்டர் நாக்கின் பெயரால்" கேட்டனர், திருப்பித்தர; "புரூப்" பார்க்க கையெழுத்துப் படியையும் கேட்டனர்; வேறு பல வழிகளைக் கையாண்டனர். அப்போது பொதுவுடைமை அணியிலிருந்து விலகிக்கொண்ட பெல்ட்ரிநெல்லி, மலையாய் இருந்தான்; எதற்கும் அசையவில்லை. சர்க்கௌவ் ஏமாற்றத்தைத் தாங்கிக்கொண்டு ஊர் திரும்பினான்.

இத்தாலிய மொழிபெயர்ப்பு 1957 ம் ஆண்டும் ஆங்கில மொழிபெயர்ப்பு இவ்வாண்டு செப்டம்பரிலும் வெளியாயின. இந்நூலை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தோர், மாக்ஸ் ஹெய்வர்டும் மான்யா ஹராரியும் ஆவர்.

"அவரது (பாஸ்டர் நாக்கினது) நடை உயர்ந்தது; அதை எந்த நாட்டு இலக்கியத்திலும் அபூர்வமாய்த்தான் காணமுடியும். அது உருசிய இலக்கியத்தில்கூட ஒப்பற்றதாய் உள்ளது!" என அன்னார் கூறுகின்றனர், பாஸ்டர் நாக் நடை பற்றி. தொடர்ந்து மொத்தம் 12 மொழிகளில் வந்துள்ளது.

1958-ம் ஆண்டின் இலக்கிய நோபல் பரிசுக்குரியவர் என ஸ்வீடிஷ் கலைமன்றம் அறிவித்து அவரைப் பரிசுபெற அழைத்தது. ஆனால் எந்த நூலுக்காக இப்பரிசு வழங்கப் பெறுகிறது எனக் குறிக்கவில்லை. பொதுவாக அவர் சிறந்த கவிஞர் என மட்டும் குறித்து. ஆனால் "டாக்டர் சிவாகோ" என்ற நூலுக்குத்தான்–அந்நூல்ன்மூலம் தொழிலாளர் வர்க்கத்தை முதலாளித்துவ நாடுகளுக்குக் காட்டிக்கொடுத்ததற்காகத்தான் இப்பரிசு வழங்கப்பெறுகிறது என்ற புயலைக் கிளப்பியது சோவியத் "பெருமக்கள்"தான்.

பரிசுபெற முதலில் ஒப்பினார், பாஸ்டர் நாக். செய்தி கிடைத்ததும் பாஸ்டர்நாக் ஸ்வீடிஷ் கலைமன்றத்தார்க்கு அனுப்பிய தந்தியில் "எடுத்தோதமுடியாத நன்றி; இதயத்தைத் தொட்டுவிட்டது இச்சேதி; பெருமைப்படுகிறேன்; ஆச்சரியமும் கொண்டேன்; பரிசை ஏற்றுக்கொள்கிறேன்!" எனக் குறித்தார். பின்னர் "பரிசு வேண்டாம்! பாராட்டுத் தருவோரே! மன்னியுங்கள், பெறவியலாமைக்கு!" எனத் தந்தி அடித்தார். அத்தந்தியில், "நான் வாழ்கின்ற சமுதாயம், இந்தப் பரிசளிப்பால் கொண்டிருக்கிற தப்பர்த்தத்தால் இதை நான் மறுக்க வேண்டிய நிலையிலிருக்கிறேன்" என்றார். ஈட்டி என இதயத்தில் இச்சேதி பாய்ந்ததேன்? மாணிக்கக் கருத்துக்களைத் தொகுத்தவன், கூனிக்குறுகி நடுங்குவதேன்? நாடறிந்த நாடகாசிரியனாக, நற்கவிதை ஆறாக நடமாடியவன்–நாடிவரும் பரிசைப் பெறக்கூடாது எனத் தடுத்தது எது? அங்கிங்கெனாதபடி எங்கும் நிறைவாகிக் கொடுமை செய்யும் உருசிய அரசே அது. அது, கொடுங்கோலேந்திய குருச்சேவ் ஆட்டிவைக்கும் கைப்பொம்மை! கைபொம்மையின் கட்டளை கவிவாணனைத் தடுத்து நிறுத்திவிட்டது.

கொடுமை அத்தோடு நிற்கவில்லை. நாக்கிற்கு அளிக்கப்பட்ட வீடு, எழுத்தாளர் மன்ற உறுப்பினர் பதவி, மற்றைய அனைத்தையும் பறித்துக்கொண்டு விட்டது.

அத்தோடு அவரது குடியுரிமையைப் பறித்துக்கொண்டு, நாடு கடத்தவும் சொன்னது அந்த எழுத்தாளர் மன்றம்.

ஏதுமற்று நிற்கிறார் நாக், தன் இலக்கியத் திறனைத் தவிர.

எவரேனும் அவரைக் காண விழைந்து, முகவரி கேட்டால், "அடடா! அவருக்கு உடல் நோயாயிற்றே! படுக்கையில் கிடக்கும் அவர் யாரையும் காணமுடிவதில்லை! வீணாக நீங்கள் சென்று, பொன்னான காலத்தை இழக்கலாமா!" என்றெல்லாம் "நீலக்கண்ணீர்" வடிக்கிறதாம் மாஸ்கோ. இந்தத் தடைகளையும் மீறிச் செய்தியாளர் டாக்டர் நில்ஸ் ஆக் நில்ஸ்ஸன் (ஸ்வீடிஷ் மொழிப் பேராசிரியர்), மேற்கு செர்மானியர் ஒருவர் முதலிய பலர் அவரைக்கண்டனர்; கருத்தறிந்தனர்.

"பாஸ்டார்நாக் வேண்டுமென்றால் முதலாளித்துவ நாடுகளுக்குச் சென்று ஒய்யாரமாய்த் திரியட்டும்!" என்றதாம் ஆணவக் கொடுமுடியான குருச்சேவ். ஆனால்...

உலகெங்கிலுமுள்ள எழுத்தாளர் பேரணிகள் பலவும், ஏடுகள் பலவும் இக்கொடுமையைக் கண்டித்துள்ளன. அவற்றின் சுருக்கங்களைத் தருகிறேன்.

இத்தாலியத் தேசிய எழுத்தாளர் மன்றம் சோவியத் எழுத்தாளர் மன்றத்திற்கு அனுப்பியுள்ள தந்தி யாவது:–

"போரிஸ் பாஸ்டர் நாக் சம்பந்தமாக நீங்கள் எடுத்த நடவடிக்கை மீது எம் மன்றம் பெற்ற கடுமையான—வேதனைக்குரிய, அதிர்ச்சியைத் தெரிவித்துக்கொள்கிறது. அதோடு அச்செயலை எதிர்க்கவும் செய்கிறது.

நாங்கள் அத்தகைய செயலை நீதியின்பாற்பட்டது என ஒப்பமுடியாது... அண்மையில் நேப்பிள்ஸ் நகரில் நிகழ்ந்த அனைத்து நாடுகள்

— அடுத்த பக்கம் —

— 8-ம் பக்கத் தொடர்ச்சி —

அழைத்துக்கொண்டு மதுரைக்கும், பின்னர் திருச்சிக்கும் போய்ச் சேர்ந்தான்.

புலித்தேவனின் இந்தத் தீவிர எதிர்ப்பு, பாளையக்காரர்களுக்கு உற்சாகமளித்தது. கப்பப்பணம் செலுத்த முன்வராமல், தாங்கள் நினைத்தபடி தங்கள் பாளையங்களை ஆண்டுவந்தார்கள் அவர்கள்.

அந்நேரத்தில் தாம் முன்னர் இழந்ததும் நவாபுவால் கைப்பற்றப்பட்டிருந்ததுமான களக்காட்டைத் திரும்பப் பெறப் படை எடுத்து வந்தான் திருவாங்கூர் மன்னன். அரசியல் நுட்பம் உணர்ந்த புலித்தேவன் இதனைத் தனக்குச் சாதகப்படுத்திக் கொண்டான். தனது படைகளையும் சேர்த்துக்கொண்டு போய், திருவாங்கூர் மன்னனுக்கு ஒத்துழைத்தான். இதனைக் கேள்விப்பட்ட மாபூஸ்கான், மதுரையிலிருந்து படை திரட்டிக்கொண்டு திருநெல்வேலியை நோக்கி ஓடிவந்தான். படையில் மேலும் பலரைச் சேர்த்தான்.

முடிவு?

இந்த முறையும் அந்தப் படை தோல்வியைத்தான் முடிவாகப் பெற்றது! வெற்றியோடு, தோல்வியுற்று ஓடிய படையினர் விட்டுச் சென்ற துப்பாக்கிகளும் லாபமாகக் கிடைத்தன புலித்தேவனுக்கு.

இதைத் தொடர்ந்து களக்காட்டுக்காகவே திரும்பவும் ஒரு போர் நிகழ்ந்தது. இம்முறையும் வெற்றிமங்கையின் கடைக்கண் வீச்சு புலித்தேவன் பக்கமே நின்றது!

இந்த வெற்றிகளால் மகிழ்ந்த புலித்தேவன், எப்பொழுதும் ஆர்க்காட்டான் படையை எதிர்க்க வேண்டிய அவசியம் ஏற்படும் என்பதை உணர்ந்து, தன் பலத்தை அதிகப்படுத்த ஆசைகொண்டான். அந்த நாளில் மிகுந்த செல்வத்துடனும், செல்வாக்குடனும் திகழ்ந்த வடகரை முதலிய பாளையங்கள் புலித்தேவனுடன் சேர்ந்தன. இன்னும் அதிகரித்துக்கொள்ள கிழ்ப் பகுதிப் பாளையங்களை நாடினான் புலித்தேவன். எல்லோரையும் இணைத்து ஒரே அணியாகத்திரட்டி, ஆர்க்காட்டு நவாபுவையும், அவனது துணைவர்களான ஆங்கிலேயர்களையும் ஒழித்துக்கட்டுவது அவனுடைய திட்டம். அந்தத் திட்டம் செம்மையாக நடைபெறத் தன்னோடு ஒத்துழைக்கும்படி, அவன் கிழ்ப்பாளையங்களின் தலைவனை பொல்லாப்பாண்டியன் கட்டபொம்முவை மிகவும் வேண்டிக் கொண்டான். அவனது வேண்டுகோளைப் பொல்லாப்பாண்டியன் ஏற்றிருந்தால், அடுத்துவந்த வரலாறு மாறுபட்டதாக அமைவதற்கு வழி ஏற்பட்டிருக்கும்; ஒருவேளை தமிழகத்தில் ஆங்கிலேயரின் ஆட்சி தவிர்க்கப்பட்டிருக்கவும் கூடும்! ஆனால், கட்டபொம்மு அதற்குக் கொஞ்சங்கூட இசையவில்லை. 'கப்பப் பாக்கிக்காகத திருச்சியில் எங்கள் ஆட்கள் பிணையாக வைக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களை நாங்கள் மீட்கவேண்டும். எனவே, ஆர்க்காட்டு நவாபுவுக்கு எதிர் அணியில் சேரவில்லை' என்றான். எட்டயபுரத்தானும் பாஞ்சாலங்குறிச்சியானைப் பின்பற்றினான். ஆனால் மதுரைப் பாளையக்காரர் சிலர் புலித்தேவனோடு சேர்ந்தனர்.

இந்தச் செய்தி, திருச்சியிலிருந்த ஆங்கிலேயருக்கும் எட்டியது. மாபூஸ்கானின் திறமைக் குறைவையும், தென்சீமையில் உருவாகி வரும் பாளையக்காரர்களின் கூட்டுறவை முறியடிக்க வேண்டிய அவசியத்தையும் நவாபுவுக்கு எடுத்துக்காட்டி, நாட்டைத் தம் மேற்பார்வையில் கொணர முயன்றனர், ஆங்கிலேயர். பெருஞ் சுதேசிப் படை ஒன்று உருவாக்கப்பட்டு, கான்சாகிப் வசம் ஒப்புவிக்கப்பட்டு, அது தெற்கு நோக்கி அனுப்பப்பட்டது.

ஆனால் அந்தப் படை வருமுன், புலித்தேவனும், அவனைச் சார்ந்தோரும் நவாபுவின் ஆளுகைக்குள்ளிருந்த சீவில்லிபுத்தூர்க் கோட்டையைத் தாக்கினர். அதனைக் காத்துவந்த அப்துல்ரஹீமும், அவன் உறவினனான அப்துல் மகூலியும் மாபூஸ்கானோடு சேர்ந்து எதிர்த்தனர். முடிவில், வழக்கம்போல் புலித்தேவனே வென்றான்; சீவில்லிபுத்தூர்க்கோட்டை அவன் வசமாகியது!

மகத்தான இந்த வெற்றி பாளையக்காரர்களைத் தலைநிமிர வைத்தது. புலித்தேவனின் பலம் மேலும் வளர்ந்தது. இந்தச் சந்தர்ப்பத்தில், மொத்தம் ஆயிரம்பேர் கொண்ட குதிரைப்படையும், இருபத்தையாயிரம் பேர் கொண்ட காலாட்படையும் அவனிடம் இருந்ததாக, 'திருநெல்வேலி கெஜட்', 'இந்துஸ்தான் வரலாறு' முதலிய நூல்கள் கூறுகின்றன.

இந்த சூழ்நிலை மாபூஸ்கானுக்கு மிகுந்த அச்சத்தை ஊட்டியது. இது எங்கே தனது அழிவில் வந்து முடியுமோ என அவன் கவலைப்பட்டான். எனவே, அவன் புலித்தேவனுக்கு எதிராக ஒரு அணி திரட்டத் தீவிரமாக முயற்சி எடுத்துக்கொள்ளத் தொடங்கினான். அந்த முயற்சியில் அவனால் முதலாவதாகத் தொட்டுப் பார்க்கப்பட்டவன் பாஞ்சாலங்குறிச்சியான் தான். பல கிராமங்களை அளித்ததுடன், திருச்சியில் பிணை வைக்கப்பட்டிருப்பவர்களை மீட்டுத் தருவதாகவும், இன்னும் ஏராளமான வசதிகள் செய்து தருவதாகவும் அவனுக்கு வாக்குறுதியளித்தான் மாபூஸ்கான். புத்திசாலித்தனமான அரசியலைப் புரிந்துகொள்ளும் தன்மை பெற்றிராத பொல்லாப்பாண்டியன், மாபூஸ்கானை நம்பினான்; அவனோடு இணைந்தும் விட்டான். எட்டயபுரத்தானும் அவனை எப்போதும் போலவே பின்பற்றினான்.

பொல்லாப்பாண்டிய நாயக்கனின் இந்தப் பொறுப்பற்ற செயல் புலித்தேவனுக்கு சினத்தை அளித்தது. போர்முரசு கொட்டினான் அவன்.

21-3-1756!

புலித்தேவன் படையும், பொல்லாப்பாண்டிய நாயக்கன் படை உட்பட்ட மாபூஸ்கான் படையும் மோதிக்கொண்டன.

எப்போதையும்போல் இப்போதும் வெற்றிபெற முடியவில்லை, புலித்தேவனால். பாதகமான அந்த முடிவைத் தாங்கிக்கொண்டு வேதனையோடு தன் கோட்டைக்குத் திரும்பினான். அவனுடன் ஒத்துழைத்த ஒரு பாளையக்காரன் போரில் கொல்லப்பட்டதும், கட்டபொம்முவின் செயலும் அவனை வருந்தவைத்தன.

போரின் முடிவு திருச்சியிலிருந்த கான்சாகிபுவுக்கு எட்டியது. பிணையாட்களை விடுவித்துக்கொண்டு தெற்கு நோக்கி ஓடிவந்தான். மாபூஸ்கானையும், கட்டபொம்முவையும், எட்டயபுரத்தானையும் சந்தித்து மகிழ்ந்தான். பிறகு அங்கிருந்து புறப்பட்டு ஒவ்வொரு பாளையத்துள்ளும் நுழைந்து, கப்பப் பணத்தை வசூல் செய்தான். தயங்கியவர்களையும், தர மறுத்தவர்களையும் தாக்கினான். இறுதியாக அவன் சீவில்லிபுத்தூரை வந்தடைந்தான். அப்போது சீவில்லிபுத்தூர் புலித்தேவனிடம் இருந்தது.

— தொடரும் —

விரைவில் வருகிறது!

புதிய நடை!
சுவையான கதை!
அழகான பதிப்பு!

காதல் கதை

ப. புகழேந்தி

விலை ரூ. 1-00

இளங்கோ பதிப்பகம்,
14, உஸ்மான் ரோடு,
சென்னை-14.

★ ★

— முன் பக்கத் தொடர்ச்சி —

எழுத்தாளர் பேரவையின் ஒரே மனதான முடிவை—உங்கள் (சோவியத்தின்) அதிகாரப் பூர்வமான பிரதிநிதியும் கலந்துகொண்ட அம் மாநாட்டின் முடிவை எதிர்ப்பதாக அமைந்துள்ளது, எழுத்தாளரின் தகுதியைத் தாக்குவதான இச்செயல்"

இத்தாலிய நூல் ஆசிரியர்களும் எழுத்தாளர்களும் சேர்ந்த விடுத்த அறிக்கை ஒன்றில், இத்தாலியின் இலக்கிய முன்னோடிகள் பலர் கையொப்பமிட்டிருக்கின்றனர். அதன் சுருக்கம் "அரசினரின் ஆசாபாசங்களுக்குப் பலியாகாமல் சுதந்தரமாகத் தம் உணர்ச்சிகள் வெளியிடுகிற நிலை எழுத்தாளர்க்கு எல்லா நாட்டிலும் வர வேண்டும் என எண்ணுகிற நாங்கள், சில அரசியல் முறைகட்காக (வேறுபாடுகட்காக) எழுத்தாளனின் உரிமைகள் மறுக்கப்பட்டதைக் கண்டிக்கிறோம். இன்று நோபல் பரிசு ஏற்பதைத் தடுக்கப்பட்டிருக்கும் போரிஸ் பாஸ்டர் நாக்கிற்காக வருந்துகிறோம்" என்பதாக உள்ளது.

இவ்வறிக்கைகளை வெளியிட்ட இத்தாலிய ஏடு ஒன்றும் பொதுவுடைமையரின் பொல்லாங்கைக் கண்டித்துள்ளது.

"சிங்கப்பூர் ஸ்டாண்டர்ட்" என்ற ஏட்டின் எழுத்து இது:

"(சோவியத் அரசின்) நடவடிக்கைகள் இலக்கிய உலகை அதிர வைத்து, குழப்பத்தில் ஆழ்த்தியுள்ளன. சோவியத் அரசுக்கு எதிரான குறிப்பானவிமர்சனம் சப்பானிலிருந்து கிளம்பியிருக்கிறது. சப்பானிய விமர்சகன் சொல்கிறான்: 'நோபல் பரிசை மறுக்கும்படி பாஸ்டர்நாக்கை நெருக்கிய சோவியத்அரசின் செயல், ஆசிய நாடுகளில் பொதுவுடைமைக் கொள்கைக்கு அடி கொடுப்பதோடு, இடதுசாரி அறிவாளிகளின் விழிகளையும் திறக்கச் செய்துள்ளது!"

"தி சியோல் சின்முன்" என்ற கொரியக் குடியரசு ஏடு காண்பதாவது: "திரு. பாஸ்டர் நாக்மீது எடுக்கப்பட்ட காட்டுமிராண்டித்தனமான நடவடிக்கைகள், கலைப்பண்பில் விடுதலையோடு வாழ்கிற மக்களை பொதுவுடைமையின் கொடுமைகளை உணரச் செய்கிற நிகழ்ச்சிகளாகும்"

"சயாம் நிக்கார்ன்" என்ற சயாமிய ஏட்டின் கருத்து: "இப்போது இது தெளிவாகிவிட்டது; சோவியத் உருசியா தனது எழுத்தாளர்க்கு தரும் சுதந்தரமும் உரிமைகளும், சோவியத் அரசின் கட்டளைப்படி எழுதுவதற்கான சுதந்தரமும் உரிமைகளும் தாம்!"

நாக் தான் பிறந்த மண்ணை, டால்ஸ்டாய், டாஸ்டோவ்ஸ்கி, கொகோல், புஷ்கின் முதலியோர் எந்த அளவு நேசித்தனரோ அந்த அளவுக்கு அணுவும் குறையாது நேசிக்கிறார். கொஞ்சுமொழி மதலை, தன்னை ஈன்ற தாயைக் கட்டி அணைத்துக்கொள்வதைக் காட்டிலும் பன்மடங்கு தன் நாட்டை அணைத்து மகிழத் துடிக்கிறார்.

"என் நாட்டின் எல்லை விட்டு நீங்குதல், எனக்கு என் சாவைப் போன்றது!" என்றார், குருச்சேவுக்கு எழுதிய மடலில்.

ஆமாம்! அவர் பிறந்த மண்தான் அவருக்கு ஒரு, உயிர்க்காவியம்—எழில் ஓவியம்—இன்பப் பூங்கா—அன்னையின் மார்பு—களிப்புக்கடல்-கனக மலர்க்கொத்து ஆகிய அனைத்தும்.

- மா. பாண்டியன் -

கவிஞன் தனிச்சாதி; கற்பனை பெண்சாதி!

எண்ணங்களுக்கு ஏற்ற வண்ணம் கொடுத்து வளமான செய்திகளை மனதிலிறுத்துவது கவிஞர்களின் பண்பாகும். கவித்துவம் உடையோர் கருத்துக்கள் கற்பனை வளத்தோடு கலந்து கவின்பெறுதலைச் சங்க கால நூல்கள் விளக்குகின்றன. மனதில் கொண்ட உருவம் ஓர் உருவகமாய் உருப்பெறுதலின் போது கற்பனை முழுமையாக அமைகின்றது எனலாம். கற்பனை வளம் இல்லாத நிலை கவித்துவம் இல்லாத நிலையையே குறிக்கும்.

கற்பனை என்பது ஆறு வகையினை உடையது என்று கூறினால் பொருந்தும். ஆறு என்ற அளவு ஒரு குறியீடே அன்றி முற்றமுடிந்த கருத்தன்று. வின்செஸ்டர் என்ற அறிஞர் கற்பனை மூன்று வகைப்படும் என்றார்.

1. புதியன படைத்தல். (The Creative)

2. இயைத்துப் படைத்தல். (The Associative)

3. உள்ளதிற்கு வேறு கூறல் (The Interpretative) இப்பாகுபாடு அன்றி, முன்னர் கூறியவாறு ஆறு பிரிவுகளாகக் கற்பனையை அமைத்தல் உண்டு.

1. காட்சி உருவங்கள்.
2. உவமை உருவகம்.
3. பிறர் உள்ள உணர்வையறிந்து அதற்குத்தக வடிவம் தரும் ஆற்றல்.
4. இருவேறுகாட்சிகளை இணைத்தல்.
5. காட்சி வேறு, செயல் வேறு செப்பல்.
6. உள்ளதை உள்ளவாறுபுதிய மெருகேற்றிக் கூறல்.

இவ்வாறு வகையும் கற்பனை வளத்தைக் கவினுறக் காட்டும் பெற்றியை உடையன என்றால் வியப்பில்லை.

உலகில் மக்கள் உள்ளுவதெல்லாம் உயர்வாக அமைதல் வேண்டும். ஒத்த பண்பும், ஒத்த அறிவும் உடைய தலைவன் தலைவி ஒத்த இன்பம் பெறுதல் கண்கூடு. பல்வேறு நிலைகளில் இவ்விலட்சியம் ஈடேறுதல் இல்லை. ஆனால் புலவனால் புதிய உலகில் அந்த அரும்பெரும் இலட்சியத்தை ஈடேற்ற முடிகின்றது.

ஓங்கி உயர்ந்த மலை, விண்ணுக்கு மண்ணுக்கும் வீதிபோன்று விளங்குகின்றது. கவிஞன் கண்டான்; சிந்தனையில் தேக்கி வைத்தான். தான் வாழும் உலகில் தாமரை படர்ந்த தடாகத்தைப் பார்த்தான். அன்றலர்ந்த செந்தாமரையை நோக்கினான். மலரைச் சுற்றி தேனீக்கள் திரிந்ததையும் கண்டான். சிந்தனையின் ஓட்டம் விரைந்து மலையின் உச்சிக்குச் சென்றது. மலையை மீண்டும் பார்த்தான்-மலையின் மேலே மணம் மிக்க சந்தன மரம் ஓங்கியிருப்பது புலப்பட்டது. தரையிலே உள்ள தாமரை தேனை இடையிலே உள்ள தேனீக்கள் மலையிலே உள்ள மணமிக்க சந்தன மரத்தில் அடையாகக் கட்டுகின்றன என்று அமைக்கின்றார்.

வாழ்க்கை இவ்வாறு அமைந்தால் சிறப்பாக இருக்கும் என்று புதிய முறையில், சந்தன மரத்தில் தாமரை மலர்த்தேன் தங்கி மணம் பெற்றதுபோல்-தாழ்ந்த நிலையில் உள்ளோரும் உயர்ந்த நிலை பெற்று வாழ வேண்டும் என்று கூறும் இது "புதியன படைத்தல்" (Creative Imagination) என்ற பிரிவின் பாற்படும்.

இருவேறு நிகழ்ச்சிகளை இருவேறு காலங்களில் இடையீடு பெற்றுப் பார்க்கின்றான் கவிஞன். முதல் நாள் கண்டமையும் பிற்றை நாள் பார்த்தமையும் சிந்தனையில் தேங்கிச் சுவைபெறுவண்ணத்தைப் பெறுகின்றது. அந்த ஓவியத்தில் கவிஞன் கண்ட கவினுறு செய்திகள் இரண்டும் ஒரே செயலைச் சிறப்புற விளக்குகின்றது.

குளிர்மிக்க நீரோடை - அங்கே அழகுள்ள ஆம்பல் மலரைத் தாங்கிய கொடி படர்ந்திருக்கிறது. நீரோடையைச் சுற்றி முள்மிக்க பிரம்புக் கொடி வளர்ந்து ஆம்பற் கொடியுடன் உறவாடிக்கொண்டிருக்கிறது. இயற்கை உறவல்லவா! உறவு முற்றி கிள்ளி விளையாடத் தொடங்கிவிட்டன. கவிஞர் பார்க்கிறார். காற்று மிகச் சுழன்று அடிக்கின்றது. மெல்லிய ஆம்பல் இலை, வலிய முள்ளுடைய பிரம்புக்கொடியைத் தழுவ, அழகிய இலையில் துளைபட்டுவிட்டது. காற்றடிக்கையில் சுதந்திரமாய்ச் சுற்றி வளைந்த இலை பிரம்புக் கொடியில் பட்ட பின்னர் அடிமைப்பட்டுவிட்டது. முள்ளினுள்ளே பட்ட இலை சிறிது சிறிதாக எழுந்து விழுகின்றது. இந்தக் காட்சியை இயல்புடைய யாரும் கண்டால் தெரிவது இயற்கையின் சிறப்புமட்டும்தான். கவிஞரும் இதனைத் தன் கண்கொண்டு காண்கின்றார். இந்தக் காட்சியில் கற்பனை இல்லை. ஆனால் மற்றொரு காட்சியை வேறொரு நிலையில் கவிஞர் காணுகின்றார். கொல்லன் உலைக்களத்தில் இரும்பு உருக்குகின்றான்- இரும்புத் துண்டினை உலையிலிட்டுச் செந்நிறமாக்கிப் பெரும் சுத்திகொண்டு அடிக்கின்றான். நெருப்புலையைக் கவிஞர் காணுகின்றார். பெரும் தோற்பை ஒன்றை மேலும் கீழும் கையினால் அழுத்திக் காற்றைச் செலுத்துகின்றான். தோற்பையின் வேலையைக் கண்ட கவிஞர் சிந்தனை பிரம்புக்கொடியின் முள்ளில் பட்ட ஆம்பல் இலையுடன் இணைந்துவிட்டது. எவ்வாறு ஆம்பல் இலை முள்ளில் அகப்பட்டு மேலும் கீழும் காற்றால் இழுத்து அலைக்கப்படுகிறதோ, அவ்வாறு இந்த ஊதுலை (தோற்பை) அமுங்கி விரிகின்றது என்கிறார். இதுவே இயைத்துப் படைத்தல் (The Associative) என்ற கற்பனையாம்.

உலகில் இயல்பாகக் காணப்பெறும் சில இயற்கைக் காட்சிகள் கவிஞர் கைப்பட்டவுடன் இணையிலா ஓவியமாதல் சிறப்பாகும். சாதாரணக் கண் படைத்த மனிதர்கள் காண்பது ஒன்று; கவித்துவக் கண்படைத்த கவிஞர்கள் காண்பது வேறொன்று. இதுதான் கவிஞருலகிற் காணப் பெறும் புதுமை.

அது செக்க சிவந்த மண்-இந்நிலத்தே பாலை ஒத்த பூவைப் பெற்ற இலுப்பை மரம்-வளைத்தடிக்கும் காற்று-இலுப்பைப் பூக்கள் தாங்குவாரற்றுத் தரையில் விழுகின்றன. தரையோ செந்நிறம், பூவோ வெண்ணிறம். இயல்பாய்க் கண்டோர் இதைத்தான் கூறுவர். புலவர் கண்டார்; இலுப்பை மரத்தின் நுனி வேல் போன்றும், பூவோ சிறு பஞ்சு போன்றும் இருந்ததாம். இந்தப் பஞ்சுபோன்ற பூ வீரனின் வாய் என்று பின் விளக்குவார். இலுப்பைப்பூ நடுவில் துளையுடையது. இது கவிஞரின் உள்ளத்தில் யாரோ மலரில் வேண்டுமென்றே துளையிட்டாற்போல அமைந்ததாம். அம்மலர் விழுகையில் கடுமழையில் வெண்ணிற ஆலங்கட்டி விழுதலைப்போல இருக்குமாம்.

இதுமட்டுமல்ல; செந்நிற மண்ணில் வெண்ணிற மலர்கள் விழுந்து கிடக்கின்றன-போர் காரணமாகக் கொலைப்பட்ட மறவர் உடலின்று கொப்பளித்த குருதி, வெள்ளமென ஓடியதால் ஏற்பட்ட செந்நிறமாயும், போரில் மாண்ட மறவர்களின் உடலில் உள்ள வெண்ணிறக் கொழுப்புபோல அம்மலர்கள் இருந்ததாயும் கவிஞர் கற்பனை விளக்குகின்றது.

நாம் கண்டது ஒன்று, கவிஞர் கண்ட வேறொன்று. இது "உள்ளதிற்கு வேறு கூறல்" (Interpretative imagination) என்ற கற்பனை ஆகும்.

கற்பனைதான் கவிதைக்கு ஆணிவேர் எனலாம். கற்பனை என்ற துணையுடன்தான் கவிஞன் கவிதைக் கனவு, கலைக்கனவு காணுகின்றான். அதன் முடிவு அவன் நினைத்த முடிவாய் அமைவதில்லை. உணர்ச்சி வந்து உறுத்திய பின்னர் தான் கற்பனைக் கனவுகள் சிறப்புறும். நன்கு பண்பட்ட உள்ளமுடைய புலவர்கள் பாடுகின்றவை அனைத்தும்தான் சிறந்த கற்பனைக் கவிதையாய் மிளிரும். நல்ல கற்பனையைக் கூறுவதற்குப் "பாதாதிகேசம்", "கேசாதி பாதம்" வருணிக்க வேண்டியதில்லை. சுருக்கமாக ஓரிரு சொற்களே பெரும் பொருளைக் காட்டுதல் கூடும். கற்பனை உடையவன் உணருகின்றதை மட்டும் சொல்லுகிறான்; விடாமல் வருணிப்பவனால் கற்பனைத் திறம் தரம் குறைகிறது.

எனவே கவிஞர்கள் கற்பனையைப் படைத்து உலகுக்கு அளிக்கும் வள்ளல்கள். அவர்கள் தாம் கண்டவற்றை முழுதும் அப்படியே கூறாமல், கண்டவற்றில் தாம் மனத்தில் கொண்டவற்றைமட்டும் தான் வெளிக் காட்டுவர். கற்பனையின் விளைவு கற்போரின் உள்ளத்து எழும் கடல்போன்ற களிப்பே என்பதில் ஐயமில்லை.

—கதிரவவன்,
பி. ஏ. (ஆனர்சு.)

'குதிரை'யாக வந்ததொரு...

"யார் இந்த மிஸ் நளினா?" என்று தன் கையிலிருந்த ஒரு துண்டுக் காகிதத்தைக் காட்டி மனைவி கோபமாகக் கேட்டாள்.

கேட்டுத் திடுக்கிட்டுப் போன கணவன், சமாளித்துக் கொண்டு, 'ஓஹோ! அதுவா? அது நான் நாளை விளையாடப் போகும் குதிரையின் பெயர்! அவ்வளவுதான்' என்றான்.

அதைக் கேட்டுவிட்டு, கடுமையான குரலில் அவள் சொன்னாள்:

"அப்படியா! ரொம்ப சந்தோஷம். அந்தக் குதிரை கொஞ்ச நேரத்துக்கு முன்னால் 'போன்' செய்தது. அது நீங்கள் குறிப்பிட்டபடி சினிமாக் கொட்டகையில் காத்திருக்குமாம். தவறாமல் போய் விடுங்கள்!"

வெண்பாப் போட்டி

30. நின்ற நிலையே நிலை.

எங்கள் தமிழ்தான் இனியமொழி; எல்லோருந்
தங்குந் தமிழ்நாடு தான்நாடு;—எங்கெங்கும்
வென்றதமிழ் வீரமே வீரம்; குறள்நெறியில்
நின்ற நிலையே நிலை.

—வளையாபதி, வெள்ளாம்-பெரம்பூர்.

❁

எண்ணில் கடவுள ரிங்குள்ளா ரென்றறிவுக்
கண்ணில்லார் சொன்ன கருத்ததனைப்—பின்தள்ளி
ஒன்றே கடவுளென ஓர்ந்ததிரு மூலனார்
நின்ற நிலையே நிலை.

—ந. இராமசாமி, சித்தையன்கோட்டை.

❁

'இச்'சென்று முத்தங்கள் இன்பமுடன் ஈந்திடுங்கால்
சச்சரவு செய்ததுயார்? சண்டாளர்!—அச்சமுற்றீர்
பின்னர் புரிந்துகொண்டீர், புள்ளென்று புன்னகைத்து
நின்ற நிலையே நிலை.

—கோ. சின்னத்துரை, ஓரத்தூர்.

❁

ஈன்ற குழவிஎனும் இன்பச் சுமைதாங்கித்
தோன்றுகின்ற என்மனையே! தோகையே!—தேன்றமிழில்
என்றன் குழவி இசைமழலை நீகேட்டு
நின்ற நிலையே நிலை.

—பனை. சண்முகம், நெற்குப்பை.

❁

இந்தி எதிர்த்திடினும், ஈழத்'தார்' ஊற்றிடினும்,
'சொந்தப் புதல்வர் சிலர்'சூழ்ச்சி—வந்தாலும்
என்றும் இளமையுடன் எங்கள் தமிழ்மொழிதான்
நின்ற நிலையே நிலை.

—ஆதவன், பி. இ., பம்பாய்-38.

❁

எண்ணில் அடங்கா இழிமொழிகள் உன்னிலையை
நண்ண முயன்று நலிந்தனபின்—உண்ணுதற்கே
ஒன்றி யிளைத்தனவே ஒண்தமிழே நீயிங்கு
நின்ற நிலையே நிலை.

—சோ. கண்ணப்பன், பெரியநாய்க்கன்பாளையம்.

❁

பண்புடைமை நல்ல பணிவுடைமை எஞ்ஞான்றும்
அன்புடைமை போற்றும் அறிவுடைமை—இந்நான்கும்
துன்புறினும் தாங்குந் துணிவுடைமை யோடியைந்து
நின்ற நிலையே நிலை.

— கு. கார்த்திகாதேவி, கமுதி.

❁

தாய்மொழியைக் காத்த தமிழ்மறவன் தாளமுத்து
வாய்மையொடு வென்ற நடராசன்—போய்மறைந்தும்
என்றும் அவர்பெருமை இவ்வுலகம் உள்ளளவும்
நின்ற நிலையே நிலை.

—சி. பி. சாமி, திருப்பத்தூர்.

❁

மந்தமதி கொண்டசிறூர் மாசுதுடைத் தேயவரை
மந்திரியாய்த் தந்திரியாய் மாமேதைச்—சந்ததியாய்
அன்றுமுதல் பண்படுத்தும் ஆசிரியர், பஞ்சைகளாய்
நின்ற நிலையே நிலை.

—முத்துவாத்தியார், நாமக்கல்.

❁

திட்டம் நிறைவேற தில்லியின்பால் கையேந்தும்
கெட்ட அமைச்சுநிலை ஓர்நிலையா?—இட்டமுடன்
அன்று தமிழ்மன்னர் ஆற்றலுடன் ஆட்சியிலே
நின்ற நிலையே நிலை.

—ச. கலைவாணி, திருபுவனை-பாளையம்.

❁

வேசி குலத்தில் விலைமகளாய்த் தோன்றிடினும்
பாசிபடி யாத புனல்போல—காசினியில்
குன்றுத் தமிழ்க்கற்பாம் கூர்வேல்மேல் மாதவியாள்
நின்ற நிலையே நிலை.

—ந. அலி, துறையூர்.

ஆசைத் தமிழ்வளர்த்(து) ஆட்சிப் புகழ்படைத்த
மீசைத் தமிழ்மன்னர் மேனாளில்—நேசித்துச்
சென்ற நெறியே சிறந்தநெறி; வாழ்விலவர்
நின்ற நிலையே நிலை.

—ஔவை, அகரப்பேட்டை.

❁

நாடு நலம்பெறவும்; நம்மக்கள் வாழ்ந்திடவும்;
பீடுகொள் நந்தமிழைப் பேணிடவும்;—நாடிதனில்
நன்றுளதாய் ஓர்சமூகம் கண்டிடவும்; நம்,கழகம்
நின்ற நிலையே நிலை.

—புத்தூரான், க. புதுப்பட்டி.

❁

வெண்ணிலவு தோன்றிவர வீசுகின்ற தென்றலிலே
கண்ணே! உனையெண்ணிக் காத்திருந்தேன்;—பெண்மயிலே!
என்னுயிரைத் தூதுவிட்டு இங்கேநான் மெய்மறந்து
நின்ற நிலையே நிலை.

—கோவி. பழனிச்சாமி, சென்னை-2.

❁

ஊருக்குச் சென்றுவந்தேன்; ஒன்றும்நான் வீட்டாரில்
யாருக்கும் வாங்கிவர வில்லைதான்!—பாருங்கள்!
ஒன்று ₹; மக்கள் மனைவியெலாம் கண்துடைத்து
நின்ற நிலையே நிலை.

—வள்ளிகாந்தன், கரந்தை.

❁

மின்னல் இடையசைய மீன்விழிகள் கீழ்நோக்க
பெண்மை நலங்கொழிக்கப் பேரழகே!—புன்னகைத்து
ஒன்றும் அறியாத ஊமைபோல் என்னருகில்
நின்ற நிலையே நிலை.

—எழிலூரான், சுந்தராபுரம்.

❁

செல்வநிலை, கல்விநிலை, சீர்சால் பதவிநிலை,
எல்லா நிலையும் நிலையல்ல;—தொல்லுலகில்
குன்று உளத்தோடு கொள்கையினில் மாறுது
நின்ற நிலையே நிலை.

—அமரன், தேனி.

அழகுச் செல்வம்!
அறிவுச் சுரங்கம்!
கவிதைக் காடு!
கற்பனைக் குவியல்!
'ஊர்-பேர்' வெண்பா!
ஓவிய வண்ணம்!

ஏராளமான பக்கங்கள்

விலை ரூ. 2-00

நிர்வாகி: பொங்கல் மலர்
தென்றல் :: சென்னை-6

ஆசிரியர் : கண்ணதாசன். அச்சிடுபவர், வெளியிடுபவர் : சுப. அருணாசலம், ஏ. எல். எஸ். அச்சகம், 2/127, மவுண்ட்ரோடு, சென்னை-6. தமிழ்நாடு.